குறள் நெறி

தமிழ் வாழ்க

(கட்சிச் சார்பற்ற அரசியல், இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு)

திங்களிருமுறை வெளிவருவது | ஆண்டுக் கட்டணம் ரூ. 5 | ஆசிரியர் : பேராசிரியர் சி. இலக்குவனர்

மலர் : 1 | திருவள்ளுவராண்டு 1995 மாசித்திங்கள் 18ஆம் நாள் (1-3-1964) | இதழ் 4

தமிழ்மொழியின் சிறப்பினை உலகமெலாம் உணரச் செய்தல் வேண்டும்

பாத்திமாக் கல்லூரியில் முத்தமிழ் விழாவில்

- கருமுத்து மாணிக்கவாசகம் செட்டியாரின் தலைமையுரை -

"தேனினும் இனிய தென் தமிழ் மொழியினை 'முத்தமிழ்' எனத் தமிழர் வழங்கும் வழக்கில் அப்பெருமக்களின் ஆழ்ந்த நுட்பம் புலனாகின்றது. மொழி என்பது, கருத்தைப் புலப்படுத்துதற்குரிய கருவி மட்டுமன்று; அதனையுங் கடந்த மேலாம்பயனையும் அளிக்கவல்லது என்பதை நோக்கி இவ் வழக்கைத் தோற்றுவித்தனர் தமிழர். இறையருள் கனிந்த இன்மொழியாகிய தமிழின் பேராற்றலை உணர்ந்து தெளிந்து அம்மொழி உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்".

இங்ஙனம் கருமுத்து மாணிக்கவாசகனார் அவர்கள், பாத்திமாக் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

பாத்திமாக் கல்லூரியினர், முத்தமிழ் விழா தொடர்பாக மாணவியர்க்குப் பல்வேறு போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்கி அவ்விழாவினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். காண்பாரைக் கவரும் வண்ணம் கலையரங்கு விழாக் கோலம்பூண்டு விளங்கியது. சீரிய கூரிய தீஞ்சொற்களை மிடைந்து தித்திக்கும் செந்தமிழில் மாணவியர் பேசினர். மாணவியர் அன்னை மொழியிடத்துக் காட்டும் ஆர்வத்தின் சின்னமாக அவ்விழா அமைந்தது எனலாம். மாணவியரிடையே, வியக்கத்தக்க வகையில், ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டி அவர்களை நன்னெறியில் திறம்பட நடத்தும் அக்கல்லூரி முதல்வர் திருச்செல்வியர் சகுந்தலா அம்மையார் பாராட்டுக்குரியவராவர்.

தலைமையுரை

நெடுங்காலமாக, இலக்கியச் சான்றோர் அனைவரும் தமிழினை முத்தமிழ் என்றே வழங்கி வந்துள்ளனர். இவ்வழக்கு பல்வேறு இலக்கியங்களில்பரவிக்கிடக்கின்றது. 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம்பொருப்பன் எனப் பரிபாடலும், 'முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்' என்று அப்பர் தேவாரமும், 'சங்கத் தமிழ் மூன்றும் தா'என ஔவையார் பாட்டும், 'முத்தமிழ்த் துறைபோகிய உத்தமப் புலவர்' எனக் கம்பராமாயணமும் முத்தமிழ் எனக் கூறி மகிழ்கின்றன. 'முத்தமிழ்' என்பது மூன்று தமிழ் என விரியும். இயல் இசை, நாடகம் ஆகிய மூன்றையும் அது குறிக்கும். இலக்கிய இலக்கணங்களை 'இயல்' என்றும், பண்ணோடு இயைந்த பாட்டை 'இசை' என்றும், இயலும் இசையும் நடிப்பும் இணைந்த கலையை 'நாடகம்' எனவும் பாகுபடுத்தியுள்ளனர் என்பதே பொதுவாகத் தரப்படும் விளக்கமாகும். ஆயின், இரு வினையிற் கட்டுண்ட மனித உயிர். அஞ்ஞானம் நீங்கப்பெற்று மெய்ஞ்ஞான வழியிற் சென்று இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பப் பெருவீட்டை அடைவதாகிய தத்துவத்தின் விளக்கமும் 'முத்தமிழ்' என்னும் வழக்கில் பொதிந்திருப்பதை ஆழ்ந்து நோக்குவோர் காணலாம். சைவசமயம் 'பதி, பசு, பாசம்' என மூன்றாக வகுக்கப்படுவதோடு இதனை ஒத்து நோக்குவது ஈண்டுப்பயனுடையதாகும். இதனாற்றான் 'தெய்வத்தமிழ்' என முன்னோர் போற்றிவணங்கினர் போலும்! இவ்வுண்மையின் விரிவினை இனிக் காண்போம்.

முத்தமிழின் தத்துவ விளக்கம்

உலகில் மனிதன் தோன்றியதும் ஏற்படுந் தொடக்க உணர்வே அசைவாகும். அவ்வசைவினைத்தான் 'படைத்தல்' (Creation) என்ற அருட் செயலாகவும் எண்ண இடமுண்டு. ஆகவேஇயக்கத்திற்கு அடிப்படை அசைவு. அசைவின்றேல் இயக்கம் இல்லை; இயக்கம் இன்றேல் உயிர் வாழ்வு இல்லை. உலகஉயிர்கள் அனைத்தும் அசைவின் அடிப்படையில் இயங்குகின்றன என்பதே தில்லைக்கூத்தன் தன் திரு நடத்தே விளங்கும் பேருண்மையாகும். அசைவின் விளைவினால் அபிநயமும் ஆடலும் நாடக உருவில் தோன்றின. மனிதன் முதன் முதலாகப் படைத்த கலை நாடகக்கலையே. கட்புலனும் செவிப்புலனும் கண்டும் கேட்டும் மகிழ்வதற்குரிய நுண் கலையாக நாடகம் விளங்கியது. நாடகத்தோடு இயைந்த இசையானது ஓடித்திரியும் உள்ளத்தினைப் பண்படுத்தி அமைதியை விளைத்தது. அமைதி பெற்ற பின்னர், சிந்தனையின் உறு துணையால் சிறந்த இலக்கியங்களைப்படைத்தனர். இலக்கியத்தின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு அடைதலாகும். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" என்பது நன்னூற் சூத்திரம். அறம் பொருள் இன்பமாகிய மூன்றையும் பெற்றபின் பின்னர் அந்நிலையிலாப் பொருள்களின் தன்மை உணர்ந்து அவாவினை நீத்துப் (Liberation) பேரின்பப் பெருவாழ்வு அடைதலே இலக்கியத்தின் பயனாகும். "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்பதே, "இயற்றமிழின்" முடிந்த முடிபாகும்.

முத்தமிழ் கற்று விளங்கு
மெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி - குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி

(அடுத்தபக்கம் பார்க்க)

உள்ளே

★ இந்தியை எதிர்ப்போர் தென்னாட்டில் இலரா?
★ நாய் மனம்
★ ஆட்சிமொழிச் சிக்கல்
★ குறள் நெறி
★ திருக்குறளில் உருவகம்
★ நீல வானத்தில் (சிறுகதை)

இன்னும் பிற

விலை 25 காசுகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னுஞ் சித்தர் பாடலே, 'முத் தமிழ்ப்' பாகுபாட்டின் தத்துவப் பொருண்மையை விளக்கப் போதிய தாகும். இம்முறையில் நோக்குங்கால் இயல் இசைநாடகம்என்னும்வைப்பு முறையை, நாடகம் இசை இயல் என வழங்கலாமென்று தோன்றுகின்றது. உலகில் வந்து தோன்றிய மனிதன் இருவினையால் நாடகமாடி அவ்வினைகளால் தாக்குண்டபோது அமைதிச்குரிய 'இசையை நாடி, முடிவில் முழு முதற்பொருளை அடைவதற்குரிய இயலைப் படைத்து வீடு பேற்றைப் பெறுகின்றான். இதுவே முத்தமிழ்த் தத்துவமாகும்.

'பாஷா கவியார் பட்டபாடு'

தமிழினை இறையோடு ஒருங்கு வைத்துத் தெய்வத் தமிழெனவும் கடவுள் மாமொழி எனவும் முன்னோர் போற்றியுள்ளனர். அம்முறை பற்றித் 'தமிழினிய தெய்வதமே' எனப் பாரதியார் பாடுவதைக்காணலாம். இத்துணைத் தெய்வத்தன்மை வாய்ந்த தமிழின்மாண்பை உணராச் சில்லோர், இதனைத் தாழ்த்தியும் வடமொழியை உயர்த்தியும் பேசி வரலாயினர். 'ழ' என்ற சிறப்பெழுத்து தமிழுக்கே உரியது. ஆயின் 'ஷ' என்ற வடமொழி எழுத்தின் சிதைந்த வரிவடிவமே 'ழ' ஆகும் எனப் பேராசிரியர் ஒருவர் கூறிவந்தார். அவருக்குத் தமிழுலகம் 'பாஷாகவி' என்றபட்டம் அளித்துப் பாராட்டியது. அவர்கருத்துக்கொண்டு அவர் பெயரை ஆராய்ந்ததில் அது 'பாழாகவி' எனப் பொருள்படலாயிற்று. தம் இறுதிக்காலத்தில் அவர் வருந்தித்தான் எதற்கும் வடமொழி கருத்தினை தமிழில் வலிந்து சுமத்தியதால் வந்த வினை என்பாராம்.

இக்கால ஆசிரியப் பெருமக்களின் கடமைகள் :

தமிழில் அறிவியல் நூற்களையும் தமிழ் நுட்ப நூல்களையும் மிகுதியாக எழுதவேண்டும். தமிழாசிரியர்கள் பிறதுறைகளை அறிந்து வல்லுநராதல் வேண்டும். அங்ஙனமே பிறதுறை ஆசிரியர்கள் தமிழ்ப்புலமை எய்த வேண்டும் இன்று தமிழுக்கு நல்ல ஆக்கம் பிறந்திருக்கின்றது 1940க்கு முன்னால் தமிழ் இசை என்றால் அப்படி ஒன்று உண்டா எனவியந்தனர் அந்தவேகம் பாரதியாரையும் 'சுந்தரத் தெலுங்கு' என்று பாடுமாறு செய்தது. இன்று அந்நிலை இல்லை. அண்ணாமலை அரசரின் அரும்பணியால் தமிழிசை சிறந்திருக்கின்றது நல்ல நூற்களுந் தோன்றி வருகின்றன. இன்னும் பலவகையால்முயன்று **தமிழ்மொழியின் சிறப்பினை உலகமெல்லாம் உணரச்செய்யவேண்டும்.**

எங்கும் பரப்புக :

நான் வடநாடு சென்றிருந்தபோது 'கண்டேயா கோயில்' என ஒன்றுண்டு என என்னை அழைத்துப் போயினர். அதனைக் கண்டபின் தான் நான் அதன் பெயர் 'கண்டறியாத மாதேவன் கோயில்' எனச் சொன்னேன் நண்பர்கள் வியந்தனர். இங்ஙனம் சிதைந்த பெயர்கள் பல. இந்தியா முழுமையும் தமிழ்மொழி பரவியிருந்த ஒருநிலைபோக இன்றைக்கு வேங்கடத்தையும் இழந்து தணிகைக்கும் குமரிக்குமிடையே தமிழகத்தின் பரப்பு சுருங்கியுள்ளது. இவ்வருந்தத்தக்க நிலையில். தமிழர்கள் ஒன்றுபட்டுத் தமிழுக்கு ஆக்கமாகும் நல்ல பணிகளைச் செய்தல் வேண்டும்

குன்றக்குடி அடிகளார் பேருரை :

அடுத்துப்பேசிய குன்றக்குடி அடிகளார் அவர்கள், தமிழர் மாண்பையும், தமிழின் உயர்வையும் அழகுபடக் காட்டியதோடு, ஓருலக உணர்வும். ஒரு மொழி வழிப்பட்ட உலகும் உருவாக வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினர். மேலும் இந்துசமயம் என்பதொரு சமயமே இல்லையென்றும், தமிழ்ச் சமயமான சைவ வைணவக் கருத்துக்களைத் தொகுத்த அவியலையே ஆங்கிலேயர் 'இந்து சமயம்' எனக் குறித்தனர் என்றும் அது பொருந்தாது என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் மாணவியர் தலைவி நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

தாய் மனம் ... ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தாளி வீட்டிற்கு வந்தால் நாம் விரும்பும் உணவை அவர்க்கு உதவுவதால் பயன் இல்லை. ஆயின், அவர் விரும்பும் உணவையே அவர் உண்ணுமாறு செய்யவேண்டும். அதனை நன்கு உணர்ந்தவள் அந்தத் தாய். பலர்க்கு விருந்து அளித்து, விருந்தோம்பும் நல்லறம் நடத்திப் பண்பட்டவள். ஆதலின், காக்கை விரும்பும் உணவை அறிந்து அதனையே தருவதாகக்கூறினாள். ஆனால் அதே நிலையில், காக்கையை ஒருசிறு பறவையாகநினைத்து இழிவாக நடத்தவும் அவள் துணியவில்லை. தன் உற்றாரும் மற்றோரும் செய்ய முடியாத அரிய உதவியை அந்தக் காக்கை செய்யக்கூடும் என்று நம்பினாள் அல்லவா? அவர்களால் தன் மகளை மீட்டுத்தர முடியாதபோது அந்தக் காக்கையின் குரல் அவர்களை வீட்டிற்கு வருவிப்பதாக நம்பினாள் அல்லவா? ஆகையால், மக்களுள் சிறந்தவர் ஒருவர் விருந்தினராக வீட்டிற்குள் வந்தால் அவர்க்குப் பொன்தட்டில்-வேலைப்பாடு அமைந்த அழகிய தட்டில் உணவு அமைப்பது இயல்பு அல்லவா? அந்த முறைப்படி காக்கையை ஒரு பறவை எனக் கருதிவிடாமல் - ஆனால் அதே நிலையில் அதன் விருப்பமான உணவை மறக்காமல் -வேலைப்பாடு அமைந்த அழகிய பொன்தட்டில் ஊண் உணவு தருவதாகக் கூறினாள்.

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தின் தருகுவென் மாதோ

என்றாள்.

இவ்வளவும் கூறியபின் தன் வேண்டுகோளைத் தெரிவிக்க வேண்டும் அல்லவா? தன் அருமைமகள் திரும்பி வரவேண்டும் என்பதே அவள் கவலை. ஆனால், காக்கை தனியே உண்ணாமல் இனத்தைக் கூவி அழைத்தே உண்ணும் என்று அதன் அரும்பண்பை உணர்ந்தவள், தன் மகளின் அரும்பண்பை மறந்து விடுவாளோ? முன்னமே அறிந்துள்ளவை கொண்டும், அன்று காலை முதல் கேட்டறிந்தவை கொண்டும் தன் மகள் உண்மையான காதல் வாழ்க்கையில் ஈடுபட்டு வெற்றிபெற்ற அனுபவம் உடையவள் அல்லவா? அந்த அனுபவங் கொண்டுதான் அவள் தன் மகளுடைய உள்ளத்தை அளந்து பார்த்துத் தெளிந்தாள். தன் மகள் இன்னும் மகளாகவே இராமல் மற்றவனுக்குத் துணைவியாகிவிட்டதை — காதலியாகிவிட்டதை அறிந்துகொண்டதால், அவள் தனியே வரமாட்டாள் எனத் தெரிந்தாள். காதலனை விட்டுத் தனியே அவளைப் பிரிக்க முடியாது என உறுதியாக உணர்ந்தாள்.

"........காளையொடு
அஞ்சில் ஓதியை வரக் கரைந் தீமே"

"அந்தக் காளையோடு திரும்பி வரட்டும்; நாங்கள் அவளோடு அவனையும், வரவேற்போம். காக்கையே! இருவரும் வருமாறு கரைக" என்றாள். அந்தக்காதலனை— தன் மருமகனை—காளை என்று குறிப்பிட்டபோது அவனைப் பற்றிக் கேட்டறிந்த வீரக் குறிப்பையும் கூறினாள். அவன் வீரமும் மானமும் குறைந்தவனாக இருந்திருப்பின் தாழ்ந்து பணிந்து பெண் வேண்டியிருப்பான் அல்லவா? அவ்வாறு பணியாமல் உடனழைத்துச்சென்றதே அவனுடைய ஆண்மைச் சிறப்பாக அவளுக்குத் தோன்றியது. அதனால் அவனை "வெஞ்சின விறல்வேல் காளை" என்று பாராட்டினாள். அவள் பெருமிதத்தோடு வேல் ஏந்திக் காட்டுவழியே செல்வதாக வழியில் கண்டவர் கூறக் கேட்டனள் போலும்!

இவ்வளவும் காக்கைக்குக் கூறியவள் "காக்கையே! கரைவாய்" என்று ஏவாமல், "கரைக" என்று கூறும் எல்லையையும் கடந்து, "கரைந்தீமே" (கரைந்தருள்வாய்) என்று வேண்டினாள்.

இது ஐங்குறு நூற்றில் ஓதலாந்தையார் பாடியதாக உள்ள ஒரு பழம்பாட்டு ஆகும்.

மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தின் தருகுவென் மாதோ;
வெஞ்சின விறல்வேல் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே!

(ஐங்குறுநூறு-391.)

[மறுஇல்—மாசற்ற. தூவி-சிறகு. கிளை-சுற்றம். நிணம்-கொழுப்பு. வல்சி-உணவு. விறல்-வெற்றி. அம்சில் ஓதி-அழகிய சிலவாக வகுக்கப்பட்ட கூந்தலையுடையவள்.

சங்க இலக்கியக் காட்சிகள்

தாய் மனம்

— பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார்,
எம் ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

காக்கை உட்கார்ந்தது! அந்தப் பனை மரத்தில் ஒரு பனம்பழம் விழுந்தது, இந்தக் காட்சியைக் கண்டவன் "காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது" என்றான்; அவன் சொன்னதைக் கேட்டவன், "அந்தக் காக்கை உட்கார்ந்ததே பனம்பழம் விழுந்ததற்குக் காரணம்" என்று தவறாக எண்ணவும் கூடும் இவ்வாறு எதிர்பாராத நிகழ்ச்சிகளைக் காரணகாரியமாக்கித் தொடர்புபடுத்திக் கூறக் கூடாது என்பதே பெரியோர் கருத்து தருக்க நூலார் காகதாலிய நியாயம் என்ற பெயரால் இதனைத் தெரிவிப்பர்.

காக்கை அந்த மரத்தில் எத்தனையோ முறை உட்கார்ந்திருக்கின்றது. அப்போதெல்லாம பனம்பழம் விழுந்ததுமில்லை. பனம்பழம் பழுத்துப் பழுதது எத்தனையோ முறை விழுந்திருக்கின்றது அப்போதெல்லாம் காக்கை அந்த மரத்தில் உட்கார்ந்ததுமில்லை. இவ்வாறு ஆராய்ந்துதான் காரணகாரிய உண்மையைத் தெளியவேண்டும்.

காக்கை வீட்டின் முற்றத்திலோ கூரையிலோ உட்கார்ந்து எத்தனையோ முறை கரைந்தது உண்டு! அப்போதெல்லாம் விருந்தினர் வந்து கொண்டிருக்கவுமில்லை. விருந்தினர் எத்தனையோ நாள் வீட்டிற்குவந்தது உண்டு; அந்த நாட்களிலெல்லாம் காக்கை தவறாமல் கரையவுமில்லை. ஆனால் சில நாளில் காக்கை கரைந்த பின் விருந்தினர் வருதல் உண்டு அதனால், காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது இது காரண காரியத் தொடர்பற்ற நம்பிக்கை ஆகையால். மூட நம்பிக்கை என்று கூறப்படும்

அறிவு கலங்காத நிலையில் ஆராய்ச்சிக்கு இடம் உண்டு. அப்போது மூட நம்பிக்கைகள் வாழ்க்கையில் புகுவதே இல்லை ஆனால், துன்ப வெள்ளம் அலைந்து வந்து புரட்டும் வாழ்க்கையில் அறிவு கலங்காமலிருத்தல் எல்லோராலும் இயலாது. பெரும்பாலோர் கவலை தொடங்கிய போதே கலங்கிவிடுவார்கள் அவர்களுக்கு அந்த நிலையில் ஆராய்ச்சிசெய்யும் ஆற்றல் இல்லை வெள்ளத்தில் அகப்பட்டுக கரைகாணாது தத்தளிக்கின்றவன் துரும்பையும் தோணி எனப்பற்றி அமிழ்வதுபோல், கவலையால் மெலிந்தவர் மூட நம்பிக்கையைக் கடைப்பிடித்து ஆறுதல் பெற முயலவர். இவ்வாறுதான் மூட நம்பிக்கைகள் பொதுமக்களின் வாழ்க்கையில் இடம்பெற்று வேரூன்றி விட்டன. மக்களின் வாழ்க்கையில் கவலையும் தொல்லையும் குறைந்து அஞ்சாமையும் அறிவும் மிகுந்தால் தான் மூட நம்பிக்கைகள் ஒழியும். அதுவரையில், ஆயிரம் ஆயிரமாகப் புத்தர்களும் திருவள்ளுவர்களும் பிறந்தாலும், கோடிக்கணக்கான சீர்திருத்த இயக்கங்கள் தலையெடுத்தாலும். மூட நம்பிக்கைகள் அழியாமல் இருந்துவரும்.

மக்கள் வாழ்க்கையில் கவலையும் துன்பமும் சங்ககாலம் முதல் இன்று வரையில் ஏறக்குறைய ஒரே வகையாக இருந்து வருகின்றன, ஆகையால் இன்று உள்ள மூட நம்பிக்கைகளில் சில புதியனவாய்ப் புகுந்திருப்பினும், பல பழையனவே ஆகும். அவற்றுள் காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பது ஒன்றாகும் இன்றும், காக்கை கரைந்தால், "யாரோ விருந்தாளி வரப்போகிறார்" என்று தமிழ் மக்கள் பேசிக்கொள்வது உண்டு அன்றும் அவ்வழக்கம் இருந்தது

ஒரு குடும்பத்தில் உற்ற வயது அடைந்த பெண் காதல் வாழ்க்கை தொடங்கிக் களவொழுக்கத்தில் சில காலம் கழித்தாள். பெற்றோர் அறிந்தால் கடிவார்கள் என்ற அச்சமும், ஊரார் அறிந்தால் அலா தூற்றுவார்கள் என்ற கவலையும் விடாமல் வருத்தி வந்தன. இவற்றிற்கு ஒரு முடிவு தேடித் தன் காதல் வாழ்வை வளம்பெறச் செய்துகொள்ள வழிகளை நாடினாள், அவள் முயற்சிக்கு ஆருயிர்த் தோழியாகப் பழகிய மற்றொருத்தி துணையாகவும் இருந்தாள். ஊரார் அறிந்து தூற்றவும் தொடங்கினார்கள். பெற்றோர் அறிந்து கடியவும் தொடங்கி விட்டார்கள். நிலைமை நெருக்கடியாகி விட்டது. தோழியின் அறிவுரை கொண்டு துணிந்தாள்; துணிந்தவாறு நள்ளிரவில் வீடடை விட்டுக் காதலனோடு வேற்றூர்க்குச் செல்லப் புறப்பட்டாள்

பொழுது விடிந்ததும் அருமை மகளைக் காணாமல் பெற்றோர் கலங்கினர்; அலைந்தனர்; அங்கும் மிங்கும் தேடினர். மெல்ல மெல்லத் தோழி வாயிலாகச் சில உண்மைகள் அறிந்தனர்; வழியில் செல்லும் போது அவளையும் அவனையும் கண்டதாக கூறிய சிலருடைய சொற்களால் சிறிது அமைதியும் பெற்றனர்.

ஆயினும், பெற்ற மனம் பித்து அல்லவா? தந்தையை விடத் தாய் நெக்குருகும் நெஞ்சினள் அல்லவா? கவலையால் கரைந்து வாடி வீட்டினுள்ளே ஒரு தூணைச் சார்ந்திருந்தாள் போலும் அப்போது அங்கே காக்கை ஒன்று வந்து 'கா கா கா" எனக் கரைந்தது கவலை வெள்ளத்துள் மூழ்கியிருந்த அவள் நெஞ்சம் மலர்ந்தது. "அருமை மகள் அந்தக் காட்டு வழியில் எவ்வாறு நடந்து செல்ல முடியும்? அவளுடைய அருமை அறிந்து பசியும் நீர் வேட்கையும் தீர்ப்பவர் யார்? அவளுடைய மென்மை உணர்ந்து அவளைப் பாராட்டிப் போற்றுபவர் யார்? அந்தோ! மகளே" என்று எண்ணி நெகிழ்ந்து உருகிய அவள் நெஞ்சம் காக்கையின் குரலைக் கேட்டஅளவில் ஒருவகை ஆறுதல் பெற்றது. ஏன்? காக்கை கரைந்தால் விருந்து வரும் அல்லவா? அந்த விருந்தினர் யார்? தன் மகளை அழைத்துச் சென்ற மருமகனே வந்தாலும் வரலாம் அல்லவா? இந்த எண்ணமே அவள் துயரத்திற்கு அருமருந்தாயிற்று.

தன் கவலை தீர்க்கும் மருந்து—இத்தகைய அருமருந்து அந்தக் காக்கையின் குரலில் இருத்தலை அவள் உணர்ந்தாள். அந்தக் காக்கையை அன்போடு நோக்கினாள். நம் வாழ்வுக்கு நல்லுதவி ஆற்றும் ஒருவரை நாம் அன்போடு பார்க்கும் போது அவரிடம் உள்ள குற்றங் குறையெல்லாம் மறைந்து அழகும் அருங்குணமுமே மேம்பட்டுத் தோன்றும்- இது இயற்கை. அந்தத் தாயும் காக்கையை அன்போடு ஆவலோடு பார்த்தபோது, அதன் அழகு தெளிவாகப் புலப்பட்டது காக்கையின் தூவி—சிறகு—அவள் கண்ணிற்கு மாசற்ற தூவியாக விளங்கியது

"மறுவில் தூவிச் சிறு கருங் காக்கை!" என்று அந்தக் காக்கையை விளித்தாள்.

"காக்கையே! உனக்கு நல்ல ஊன் கலந்த உணவு தருவேன் எனக்கு நீ ஒரு நல்லுதவி செய்யவேண்டும். அதாவது; என் மகள் தன் காதலனோடு திரும்பி இந்த வீட்டிற்கு வருமாறு நீ கரைய வேண்டும். நீ கரைந்தால் விருந்தினர் வருவார் அல்லவா? அவர்கள் வருமாறு நீ கரைய வேண்டும்" என்று இதைத்தான் அந்தக் காக்கைக்குச் சொல்லத் தொடங்கினாள்.

ஆனால் அவள் கண் அந்த காக்கையின் அழகிய தூவியைக் கண்டது போலவே அவள் மனம் அதன் அருங்குணத்தையும் எண்ணியது. காக்கையின் அருங்குணம் என்ன? அது தனியே உண்ணாது; உறவு கலந்தே உண்ணும் ஒரு சிறு முறுக்குக் துண்டைக் கண்டாலும், "கா கா" என்று தன் இனத்தை யெல்லாம் கூவியழைத்தே உண்ணும் 'காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றும் அறத்தை அளந்து கண்டு அறநூல் இயற்றிய திருவள்ளுவரும், உண்மையை உள்ளவாறு உணர்ந்து பாடிய தாயுமானவரும் தெளியுமாறு வாழும் வாழ்க்கையல்லா காக்கையின் வாழ்க்கை!

இதனை எண்ணிய தாய். அந்த ஒரு காக்கைக்கு மட்டும் உணவு தருவது கைம்மாறான உதவியாகாது என உணர்ந்தாள். தன் கவலை தீர்க்கும் காக்கைக்குக் கைம்மாறு செய்வதானால், அதன் சுற்றமெல்லாம் கூவி அழைத்து உண்ணுமாறு நிறையத் தர வேண்டும் என எண்ணினாள்.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின்நின் கிளையோடு ஆர...
தருகுவென்..."

என்றாள்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

15-2-64 இதழின் தொடர்ச்சி

தொல்காப்பிய விளக்கம்

(எழுத்துப் படலம்)

— பேராசிரியர் சி. இலக்குவனார்

நூன்மரபு

3. அவற்றுள்

அ, இ, உ,
எ, ஒ என்னும் அப்பால் ஐந்தும்
ஓர் அளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப

4. **ஆ, ஈ, ஊ, ஏ, ஐ**
ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈர் அளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப

பன்னிரண்டு உயிர்களையும் 'குற்றெழுத்து' 'நெட்டெழுத்து' என இருவகைப்படுத்தினர். குற்றெழுத்தை ஒலிப்பதற்கு ஒரு மாத்திரையும் நெட்டெழுத்தை ஒலிப்பதற்கு இரண்டு மாத்திரையும் வேண்டப்படும். (மாத்திரை என்ன என்பதுபற்றிப் பின்னர் விளக்கப்படும்).

இவ்வாறு உயிர் எழுத்துக்களைக் குறிலாகவும் நெடிலாகவும் வகைசெய்து அமைத்துக்கொண்டமையின் எழுத்துக்களை ஒலிக்குங்கால் இடர்ப்பாடு தோன்றுது. ஆங்கிலத்தில் ஒரே எழுத்து. குறிலாகவும் நெடிலாகவும் இடத்திற்கு ஏற்ப ஒலிப்பதால் ஏற்படும் இடர்ப்பாட்டை நாம் அறிவோம்.

5. **மூவளபு இசைத்தல் ஓர் எழுத்து இன்றே**

மூன்று மாத்திரை அளவு கொண்ட தனி எழுத்து, தமிழில் இல்லை. இரண்டு மாத்திரைக்கு மேல் ஒலிக்க வேண்டுமனால் என்ன செய்யவேண்டுமென்பது அடுத்த நூற்பாவில் கூறப்படுகின்றது.

6. **நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய**
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்

நெடில்எழுத்துக்குவரையறுக்கப்பட்டஇரண்டுமாத்திரைக்குமேல் ஒரு எழுத்தைஒலிக்கவேண்டியநிலை ஏற்பட்டால்,எவ்வளவுமாத்திரைநீட்டவேண்டுமோ அவ்வளவு மாத்திரையுள்ள குறில்களைச் சேர்த்து ஒலித்தல் வேண்டும். 'ஆ' என்னும்கால் மூன்று மாத்திரையளவு ஒலிக்க வேண்டுமானால் 'ஆ அ' என்று (2+1) ஒலிக்கவேண்டும். நான்கு மாத்திரைகள் வேண்டுமென்றால் 'ஆ அ அ' என ஒலிக்கவும் வேண்டும்; எழுதவும் வேண்டும்.

மாத்திரையை மிகுத்து ஒலிக்க வேண்டிய இடங்கள், பாட்டு, பண்டமாற்றுக் கூப்பாடு, பிறரைக் கூப்பிடுதல் முதலியனவாம்.

காட்டுகள்: தமிழேஎ வாழ்க—பாட்டு
உப்போஒ உப்பு—பண்டமாற்று
முருகாஅஅ—கூப்பிடுதல்

7. **கண் இமை நொடி என அவ்வே மாத்திரை**
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே

மாத்திரையின் அளவு ஒருமுறை கண்களை இமைத்தற்கும், கைவிரலை நொடிப்பதற்கும் எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரமாகும். ஆதலின் ஒருமாத்திரை நேரம் என்பது ஒருமுறை கண் இமைப்பதற்கோ கைவிரலை நொடிப்பதற்கோ வேண்டப்படும் நேரமாகும். 'மாத்திரை' என்பது தூய தமிழ்ச்சொல். 'மா' என்பதின் அடியாகத்தோன்றியுள்ளது. இச் சொல் வடமொழிக்கண் சென்றுள்ளது.

8. **ஔகார இறுவாய்ப்**
பன்னீரெழுத்தும் உயிர் என மொழிப

அ முதல் ஔ இறுதியாக உள்ள பன்னிரண்டையும் 'உயிர் எழுத்து, என்று கூறுவார்கள்.

9. **னகார இறுவாய்ப்**
பதினெண் எழுத்தும் மெய் என மொழிப

'க' முதல் 'ன' இறுதியாகப் பதினெட்டு எழுத்துக்களையும் 'மெய் எழுத்து' என்று கூறுவார்கள்.

தொல்காப்பியர்க்கு முன்பே எழுத்துக்களை 'உயிர்' என்றும் 'மெய்'என்றும் பிரித்து வழங்கியுள்ளனர். அதனால்தான் 'மொழிப' என்று ஆசிரியர் சுட்டியுள்ளார். எழுத்துக்களை 'உயிர்' என்றும் 'மெய்' என்றும் பிரித்திருக்கும்நயம் அறியத்தக்கது. நம் உடல் உயிரால்தான் இயங்குகின்றது. உயிர் போயின் உடல் அசைவற்று விடுகின்றது. உயிர் வேறு உடல் வேறு என்று அறிவது மெய்யுணர்வின் பாற்படும். இப்மெய்யுணர்வு தலைப்பட்டு வாழ்ந்த தமிழர் தம் மொழி எழுத்துக்களையும் 'உயிர்' என்றும் 'மெய்' என்றும் பாகுபாடு செய்துள்ளனர். 'உயிர்' போன்று ஒலிப்பதற்கு அடிப்படையாக உள்ள எழுத்துக்களை 'உயிர்' என்றதும் உயிரின் துணையால் இயங்கும் 'மெய்' (உடல்) போன்று உயிர் எழுத்தின் துணையால் ஒலிக்கும் எழுத்துக்களை 'மெய்' என்றதும் உவமையாகு பெயராகும்.

இப்பாகுபாட்டை மொழிநூல் அறிஞர் டாக்டர் கால்டுவெல் மிகவும் புகழ்ந்து பாராட்டியுள்ளார். (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் -ஆங்கிலம் பக்கம் 132)

10. **மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா**

உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாகும் எழுத்து 'உயிர்மெய்' எனப்பட்டது. உயிர், மெய்யோடு சேர்ந்து ஒலித்தாலும் உயிர்எழுத்துக்களின்தன்மை மாறுபடாது. உயிர்க்கு உள்ள மாத்திரையே உயிர்மெய்க்கும் ஆகும். 'கா' என்பதில் 'க்+ஆ' எனும் இரண்டும் சேர்ந்திருப்பினும் 'ஆ'வின் மாத்திரையாகிய இரண்டுதான் 'கா'வுக்கும் என அறிதல் வேண்டும்.

11. **மெய்யின் அளபே அரை என மொழிப**

மெய் எழுத்திற்கு அரை மாத்திரை உண்டு என்று கூறுவார்கள். மெய் எழுத்தைத் தனியாகக் கூறும்போது அதற்கு அரை மாத்திரை ஒலி வேண்டப்படும.

12 **அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே**

(முதல் எழுத்துக்கள் முப்பதும் நீங்க) ஏனைய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பு எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அரை மாத்திரை ஒலியே பெறும்.

(தொடரும்)

வருக குறள் நெறி!

— தென்காசி சி. கலியபெருமாள்

எங்கிருந்தோ கேட்டது இனிய குரலொன்று!
ஏந்திவந்த இசையினிலே இயற்றமிழ் மிகநன்று!
பொங்கருவி பாய்ந்துவரும் வெள்ளந் தனைக்கண்டு!
பூரித்து கிளம்பிபது புற்செடிகள் உண்டு!
காங்கலர் தார் சோலையிலே பொறிவண்டு சுற்றி!
குவிழ்த்தமலர் விரிந்திடவே குந்திருக்கும் பண்மிடற்றி!
சங்கதிரும் முழக்க மெலாம் செந்தமிழ்க் கற்கண்டு!
சாதிப்போம் செந்தமிழில் திருக்குறள் சொற்கண்டு!

உலகமறை வள்ளுவத்தை உணர்ந்து மிகக்கற்று!
உயர்ந்திடவே யாவர்க்கும் மூண்டு நனிப் பற்று!
திலகமதாய் தீந்தமிழின் நெற்றியிலிடும் பொட்டு!
தீபவொளி ஏற்றிருக்கும் திருக்குறளெனும் தட்டு!
சலசமாக திருக்கோயில் முடியிருக்கும் சிறப்பு!
கனிதமிழின் குலத்திறகு திருக்குறளின் பிறப்பு!
பலவு கொடுக்கும் இன் சுவையின் தேக்கப்!
பைந்தமிழ் நிலைவிளக்க திருக்குறளோர் விளக்கம்!

மலர்ச்சோலை நுழைந்திட்ட மாத்திரத்தில் பலவண்ணம்!
மாத்தமிழின் சோலையிலே திருக்குறளின் எண்ணம்!
அலர்கின்ற மலரிடத்தில் இதழென்ற தேன் திண்ணம்!
அருந்தமிழின் பெட்டகத்தில் குறளொளிமணி இது
திண்ணம்!
புலர்கின்ற பொழுதினிலே புத்தொளியின் ஆக்கம்!
பூந்தமிழின் பொய்யா மொழியில் மிகத்தேக்கம்!
இலங்கிழையாள் அணிந்திருக்கும் முத்து மணிக்
கோவை!
இயற்றமிழை போற்றிடுவோம் இன்குறளில் ஒரு
பார்வை!

முத்தனைய சொல்லெடுத்து முத்தமிழின் தாய்க்கு!
மூதறிஞன் ஏற்றிவைத்த முப்பாலெனும் திருவிளக்கு!
கொத்தனைய மலர்க்கருத்தால் குறளென்று தொடுத்து!
குலத்தாய்க்குச் சூடி நின்றான் அறிவு மனம் மிகுத்து!
நத்துமின மக்களெல்லாம் நந்தமிழைப் பற்றி!
நாளெல்லாம் புகழ்மணக்க நடந்திடுக குறள் சுற்றி!
பத்தொரு நற்றிங்கள் பதுங்கிருந்தாய் வயிற்றில்!
பார்விளங்கச் செய்திடுவோம் திருக்குறள் நற்பயிற்றில்!

வள்ளுவத்தின் பொருட்குவியல் வாரிமிக இறைத்
தெங்கும்!
வண்டமிழின் நிலைவிளக்க சங்கமொடு தெருவிலெங்
கும்!
உள்ளமதில் நிறைந்திருக்கும் குறளென்னும் ஒளிச்சுடர்!
உரைத்தெங்கும தமிழ் பரப்பத் தொடங்கிடும் நற்றொண்
டர்!
வெள்ளத்தின் படிற்றொழுக்கமாய் வண்டமிழின் நிலை
விளக்கி!
விரியுலகம் பயனடைய குறளுக்கு நாம்துவக்கி!
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் பைந்தமிழன் நிலைஅறி!
பாதுகாக்க வந்ததுவே பேரறிஞர் குறள்நெறி!

குறள் நெறிக்கு வாழ்த்து.

— வித்துவான் சி. இராமசாமி

வள்ளுவனார் குறளளித்தார்; இலக்குவனார் குறள்
வளர்க்க வந்தார்; [நெறியை
உள்ளுவப்பக் கலைத்தந்தை கருமுத்திங் குரமளித்தே
ஊக்கந் தந்தார்;
தெள்ளுதமிழ் முப்பாலைத் தீம்பாலாய்த் தெளி தேனாய்த்
தேர்ந்து மாந்த
அள்ளுசுவைக் கருத்துரைகள், அறிஞர் வடித்தாரிவர்
ஆக்கம் வாழ்க! [தம்

திருக்குறளே நாட்டொருமை திரட்டுமொரு தமிழ்
தேயம் எங்கும் [மறையாம்
பெருக்கமுற நமதுரிமைப் பேரரசு தெளிந்திதனைப்
பேணல் வேண்டும்!
உருக்கமுடன் ஒருகொடியும் ஒருமொழியும் ஒற்றுமையை
உயர்த்தும் என்போர்
இருக்குமிதைத் தேசியத் திருப்பாட்டாய் ஏற்றின்பம்
எய்தி வாழ்க!

"வேண்டும்"

— ஒ. மு. குருசாமி

தாய்மொழியாம் தமிழ்மொழியைக் காக்க வேண்டும்
தளராமல் எந்நாளும் உழைக்க வேண்டும்
வாய்மொழியைச் செயலுருவா ஆக்க வேண்டும்
வள்ளுவர்தொல் காப்பியமும் பரவ வேண்டும்
ஆய்வுரைகள் தமிழ்மொழியில் பெருக வேண்டும்
தண்டமிழே தலை சிறந்து விளங்க வேண்டும்
ஓய்ந்துவிடும் மனமுடையார் குறைய வேண்டும்
உலகமெலாம் தமிழ்நூல்கள் செல்ல வேண்டும்

திருவுடைய "குறள் நெறியே" பரவ வேண்டும்
தினந்தினமும் திருக்குறளை ஓத வேண்டும்
அருளுடையார் அன்புடையார் பெருக வேண்டும்.
அறிவுடையார் மொழிகாக்கக் கிளம்பவேண்டும்
உருவுடைய நற்செயலை ஊக்கவேண்டும்
உண்மைக்கு வணக்கமதைச் செய்ய வேண்டும்
இருளுடைய தமிழெதிரி நீங்கவேண்டும்
இன்றமிழின் இலக்கியத்தைக் கற்கவேண்டும்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி மொழிச் சிக்கல் . . .

தெரிந்தே விடுகிறோம் என்றும் சட்டமன்றின் வரியிலாகத் தீர்மானித்துவிட்டோரைப் பற்றிக் கணக்கிலெடுத்துக்கொண்டு மீண்டும் பதினான்கு, பதினான்கு என்றால் என்ன பொருள்? இது தமிழ் மக்களின் தெளிவுக்குத் திரைபோடும் முயற்சியா? மக்களாட்சி முறைக்குக் கறையேற்படுத்தும் வீண் கூச்சலா? சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆக இந்தி ஒன்று தமிழ் ஒன்று எனப் பொதுமொழிகள் இரண்டுதானே நடைமுறைக்கு வரமுடியும். நாற்பத்தைந்து கோடி மக்களுள்ள துணைக்கண்டத்தில் இரண்டு மொழிகளில் நிர்வாகம் நன்கு நடத்தலாமே மற்ற பதின்மூன்று மொழியினர் தங்கட்கு இந்திய நிலை வேண்டாம் என்றும் இந்தியே அதற்குப் போதும் என்றும் முடிவாகச்சொல்லிவிட்டதால் இந்திஎன்பது பதின்மூன்று மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிப்பதாகிறது. அவர்கள் போலல்லாது அரசியல் சட்டத்தில் தனக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பினைத் தமிழ்பெற விழைகிறது. அது ஏனை மொழிகளோடு அன்றே தமிழுக்கும் அளிக்கப்பட்ட உரிமை; ஏனையோர் இவ்வுரிமையை விரும்பி இழக்கின்றனர்; இழப்பது தங்களுக்குப் பெருமை என்றுகூடச் சொல்கின்றனர் என்பதால் தமிழும் அங்ஙனம் தனது உரிமையினை இழக்கவேண்டும் என்றுஎதிர்பார்ப்பது அறிவுடைமையாகுமா? அதை யாராலும் வற்புறுத்தவும் முடியாது. இந்திக்கு மத்தியாட்சியில் ஒரு இடம் அளிப்பது நியாயமே. ஆனால் தமிழுக்கு அதன் இடம் இல்லை என்பது அரசியற் சட்டத்தாலல்லாமல் வேறு எதைக் கொண்டு? இந்தியின்மீது தமிழர்க்கு வெறுப்பில்லை ஆனால் தமிழரல்லாத அத்துணைபேருக்கும் தமிழின் மீது பொருளற்றதோர் வெறுப்பு, காழ்ப்பு, சீற்றம் எல்லாம் ஏற்படுவதேனோ? உரிமை மறுக்கப்படுவதன் விளைவுதானே. கிளர்ச்சி விளைவுகளைப் பொருட்படுத்தாமல் தீர்வுகாண வேண்டின் இந்திய அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழிப் பகுதியினை அப்படியேநீக்கிவிட்டு இந்திமட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாகவிருக்கும், ஏனையவை அந்தந்த மாநில அளவில் மட்டும்இருந்துவரும்என்றுவெளிப்படையாக அறிவித்திடல் வேண்டும் இன்றேல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை எந்த விலை கொடுத்தேனும் எதையிழக்க நேரிடினும் தந்தேயாகவேண்டும். அதுதான் அரசியல் அறநெறி,

★ கருத்து அரங்கம் ★

நான் பிறப்பால் தமிழன்! மொழியால் தமிழன். என் கதை, கட்டுரைகளில் தமிழ் தவிர பிற மொழிச் சொற்கள் இடம் பெறா!

சுருங்கக் கூறின் என் உடல், பொருள், ஆவி தமிழ் தான்!

எனினும் தேசியப் பற்று உடையவன். என் தேசம் இந்தியா! என் தலைவர் நேருஜி. என் உரிமை காமராஜர். என் சகோதர, சகோதரிகள் நாற்பது கோடி மக்களும்!

ஆக, மொழியால் தமிழையும், நாட்டால் இந்தியாவையும் விரும்புகின்ற நான் தங்கள் இதழான "குறள் நெறி"யைத் தொடர்ந்து படித்துவருகிறேன்!

அதில் தாங்கள் மொழிபற்றிய கருத்துக்களில் கையாளும் தன்மை அவ்வளவு மன நிறைவு தருவதாகத் தெரியவில்லை!

அதனால் எழுந்த சில கேள்விகள் தாம் கீழே தருகிறேன். அதற்குத் தாங்கள் தயவுகூர்ந்து விபரமாக பதில் கூறவேண்டுமென்று நன்றி உணர்வுடன் வேண்டிக்கொள்கிறேன்.

வினாக்கள் :

1 இந்தியால் தமிழ் எந்தவகையில் அழிந்தது? அழிகிறது? அழியும்?

2 நம் நாட்டில் உள்ள மாநிலங்களின் தொடர்பிற்கு உரிய மொழி இந்தி என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

3 தமிழ்நாட்டில் இதுவரை எந்த எந்த இடங்களில் இந்தி புகுந்துள்ளது? அதனால் தனி மனித வாழ்வு யாருக்காவது பாதிக்கப்பட்டுள்ளதா?

4 இந்தி மொழியால் எங்காவது ஓர் இடத்தில் தமிழ் மொழி மறைந்திருக்கிறதா?

5 பிற மொழிகளைக் கற்பதால்தான் ஒருவனின் தாய் மொழி உலகப் புகழ் பெற முடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்கிறீர்களா? இந்த வகையில்தான் தமிழால் ஆகிய திருக்குறள் இன்று உலகப் புகழ் கண்டுள்ளது என்பதை மறைக்க இயலுமா?

6 மொத்தத்தில் இந்தியால் நம் தமிழ் கிஞ்சித்தும் சிதைவுறுது என்று பசுமரத்தாணிபோல என்மனதில் பதிகிறது! இதில் உங்கள் மனச்சாட்சி என்ன?

7 இறுதியாக தாங்களும் இன்னும் சிலரும் வேண்டாத இந்த மொழி விசயத்தில் இறங்கி, இந்தி-தமிழ் எனப் பிரித்துப் பேசுவதால், அது ஒரு சில கட்சிகளுக்கு வளர்ச்சியாகவும், நம் இந்திய தேசத்தின் பற்றிலிருந்து ஒரு சிலரை வெளியேற்றுவதாகவும் அமைகிறது என்பதை நீங்கள் உணருகிறீர்களா?

ஐயா,

தாங்கள் இக்கேள்விகளுக்கு விரைவிலேயே பதில் கூற வேண்டும் என்று விரும்புகின்றேன். தங்கள் பதில் எனக்கு மன நிறைவு அளிப்பதாக அமைந்தால் **மறுநாளே இந்தி ஒழிப்பு போராட்டத்தில்** முதலாவதாக இறங்கி விடுகிறேன். இது உறுதி. சத்தியம்.

— **'பாரதம்' எம். சி. லிங்கம்**
மதுரை-11.

இவர் கேள்விகட்கு

விடை எழுதுவோர் எழுதலாம். விடைகள் அன்புடன் வரவேற்கப்படும். அன்பர்கள் கருத்துக்களை எல்லாம் வெளியிட்ட பின்னர் ஆசிரியர் கருத்து அறிவிக்கப்படும்.

— **ஆசிரியர்**

அன்பர் அஞ்சல்

... இஃதோர் கற்கவேண்டிய இதழ்; எனக்கோர் 'நன் மருந்து', அறிவுப்பாட நூல். ஆதலின், வாழ்க்கைத் தேர்வுக்கென வெற்றி நோக்கோடு கற்கிறேன்; படிக்கவில்லை!

செந்தீயில் மூழ்கிய தீந்தமிழ் மறவன் சின்னச்சாமியை, சாதாரண தீ எரித்து மாய்க்கவில்லை; கொடிய இந்தித்தீயே மாய்த்தது! மானமுள்ள தமிழன். தீய்ந்து போனான். இக்கொடுமையை எண்ணிய மேலிடத்தோர் யார்? அவர்தம் தமிழ் மானம் எங்கே? பதவிக்கிரை யாயினவோ? பேராசிரியரின் "...சாமியை நினைத்து, ஆம் நற்றெண்டு ஆற்றுமின் தமிழ் காக்க" - எனும் கட்டளை என்போன்றோர்களுக்கே என ஏற்று, எழுந்துவிட்டோம், தமிழ் உலகு மேம்பட!

'தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில்' அழிந்த தமிழின் அவலத்தைக் காண்கிறோம்; தன்மானம் கண்ணீர் சொரிகிறது! ஆனால் உள்ளம் சோரவில்லை; தமிழ் மண்ணில் நிற்கும் 'இயற்கை வீரம்' எழுகிறது. இனியும் தெய்வத் தமிழ் சீர்கெட விடோம். தமிழ்க் காப்புக் கழகம் என்போல் கோடி கோடியாய் இணைக்கட்டும்! ஒன்றுகூடிய வீரம் அணுவாற்றலினும் சிறந்ததன்றோ? நலிந்த தமிழ் நல்லுரு பெறட்டும்.

தமிழ்உணர்வும் குறள்நெறியும் தமிழ்மண்ணில்எங்கு நோக்கினும் பூத்து மணக்கவேண்டும்.

இது என் உயிரொத்த குறிக்கோள்!

— **ச. சிவசங்கரன், பி. இ.,**
மணப்பாறை

... சென்ற ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகப்பட்டமளிப்பு விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றைக் 'குறள் நெறி இயக்கம்' காணும் தங்களிடம் தெரிவித்தல் சால்புடைத்து என எண்ணுகிறேன். உந்தப்பட்ட உணர்ச்சியின் விளைவல்ல, பற்பல நாட்களின் சிந்தனையும்; உறக்கமற்ற இரவுகளும், உள உளைச்சலும் ஆகிய இவற்றின் மறுபிறப்பே இம்மடல்.

தமிழகத்தின் தலைநகரில் பட்டம் பெறச் சென்ற என்னிடம், விவிலிய நூலும் (ஆங்கிலம்) பகவத் கீதையும் (வடமொழியுடன் ஆங்கிலமொழி பெயர்ப்பு) அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டன; எனக்கு மட்டுமல்ல என்போன்று பட்டமளிப்பு விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் அளிக்கப்பட்டன. இதைக்கண்ட என்னுள்ளம் கருத்தழிந்தது; சமயத்தைப் பரப்ப விழைவோர் செய்யும் இச்செயலைக் குறள் நெறி பரப்ப விரும்பும் நீங்களும் (திருக்குறள் படியைக் கொடுத்து) செய்யலாகாதா! தமிழால்வாழ்வோரும் அறிஞரும், ஆசிரியரும் கற்றறிந்தோரும் குறள்நெறி பரப்ப விழைவோரும் மனமுடையோரும், பணமுடையோரும், தமிழரும் இதனைச் சிறிது சிந்திக்க வேண்டுகிறேன்.

செந்தமிழ் மறவன் ஒருவன் வெந்தீயில் இறந்த பின்னும் 'காலம் வரும் காத்திருப்போம்' என்று அமைவது அழகன்று குறள் நெறியைப்பரப்பும் நீங்கள் பட்டமளிப்பு விழாவில் திருக்குறளை அன்பளிப்பாக அளிக்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

— **வி. சூ. கோவிந்தன்**
மதுரை

தமிழராய்ப் பிறந்தோர் அனைவரும் இளம் பருவத்திலேயே திருக்குறள் முழுவதையும் காணப்பாடமாகக் கொண்டிருத்தல் வேண்டும், முதற்பட்டம் பெறுவதற்குள் திருக்குறளை முற்றும் கற்றிருந்தால் வாழ்வில் செம்மையும் நாட்டில் நல்லமைதியும் தவழும். ஆகவே பட்டம் பெறுங்காலத்தில் திருக்குறளை இலவசமாகப்பெற்றுத்தான் படிக்கவேண்டும் என்று எண்ணுவது திருக்குறளின் சீர்மையை இன்னும் நாடு உணர்ந்திலது என்பதனைக் காட்டுகின்றது.

இலவசமாகப் பெறும் விவிலிய நூலும் கீதையும் என்னவாகின்றன? திருக்குறளும் அந்நிலையை அடைதல்வேண்டாம். கரும்புதின்னக்கூலி வேண்டுமோ?

ஆசிரியர்

... தமிழ்ச்சாமி உயிர்த்தியாகம் பற்றி "குறள்நெறி" முதற்பக்கத்தில் வெளியிட்டது குறித்து மிக மகிழ்கின்றேன். இதனை ஆங்கில ஏடுகள் முதன்மை தராது மறைத்து விட்டன. தமிழகத்திலிருந்து பல ஆங்கில ஏடுகள் வந்தும் கூட, அவை தமிழுணர்ச்சி இன்றியிருப்பது வருந்தத்தக்கது

— **சி. நா. ப. சண்முகன்**
சென்னை

மேலை மருத்துவ முறைகள்

— டாக்டர் ச, காமேசுவரன்

செவி மந்தத்திற்கு மருத்துவம் :

"அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது, மானிடராய்ப்பிறப்பினும் கூன், குருடு, செவிடு நீங்கிப்பிறத்தல் அரிது" என்பது ஒரு முதுமொழி.

மனிதன் தன் உற்றாரோடும், உறவினரோடும், இனத்தாரோடும் இயங்குவதற்குற்ற உறுப்பு செவி. காதில் கேளாத மொழியை ஒருவன் பேசுவது இயலாத காரியம். குழவிப் பருவத்தில் கேட்கும் வல்லமையை இழந்த ஒரு குழந்தை யாதொரு ஒலியையும் கேட்டறியாத ஒரு காரணத்தால் பேசமுடியாமல் இருக்கும் நிலையில் ஊமை என்று அழைக்கப்படுகிறது. காது கேளாமையைப் பற்றிக் குறிப்பிடும்போது பலர் நினைப்பில் குடிகொண்டிருக்கும் ஒரு தவறான எண்ணத்தை மாற்ற வேண்டியது இன்றியமையாதது, ஊமை என்று அழைக்கப்படுபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் உண்மையான ஊமைகள் அல்லர். உண்மையான ஊமையர்கள் பேசும் உறுப்புகளில் மட்டும் குறைபாடுள்ளமையால் நாவால் பேச இயலாதவர்கள். அவர்களுக்குக் காது நன்றாகக் கேட்கும் ஆனால் பேசும் உறுப்புக்களில் குறை ஏதுமின்றி காது கேளாத காரணத்தினால் மட்டும் ஒலியை உணர்ந்து அறியாமல் பேசும் வன்மையை இழந்தவர்களை ஊமைகள் என்பது தவறு.

செவிடர்கள் என்று ஒரே சொல்லில் பலதரத்தவர்களை நாம் சுட்டிவிடுகிறோம். ஆராய்ச்சித் துறையில் நோக்குங்கால் முழுச் செவிடானவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

ஆடியோகிராம் (Audiogram) என்ற காதின் கூர்மையை அளக்கும் கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது அதைவைத்து அளவிடும்கண் முற்றும் கேளாத செவிடர்களிடம்கூட "கேட்கும் தீவுகள்" (Islands of hearing) தென்படுகின்றன. அதாவது ஒலிக் கதிர்களில் சில கதிர்களை மட்டுமாவது உணரும் வன்மை இவர்களிடம் இருக்கிறது. மேல்நாடுகளில் இந்த ஒலித் தீவுகளை வைத்துக் கொண்டு, அவைகளைப் பயன்படுத்தி சொல்லின் பொருளை புரியவைத்து கூர்ந்து கவனிக்கும் ஆர்வத்தை உண்டுபண்ணி, செவிடர்களையும் கேட்கவைக்கிறார்கள். இம்முறையில் பார்க்கப்போனால் காது கேட்காத முழுச்செவிடு என்று சொல்லக்கூடிய குழந்தை எதுவுமே இல்லை என்றே சொல்லலாம். செவிடு என்பதற்கு பதிலாக காது மந்தம் என்பது ஒரு நல்ல சொல். காதினுள் அமைந்து ஒலியைப் பதித்து அதை மூளைக்கு உணர்த்தும் உறுப்புகள் சிலஉள்ளன இவை சரியான வளர்ச்சி அடையாமல் இருப்பதால் ஒரு குழந்தைக்கு காது மந்தமாய் இருக்கலாம். அவை முழுமையும் வளர்ச்சியடையவே இல்லையா. அல்லது கொஞ்சம் வளர்ச்சிக் குறைவாக இருக்கின்றனவா என்பதைப் பொறுத்து, காது மந்தமும் பலவகைப்பட்டிருக்கும். இப்படிப்பட்டவர்களில பலருக்கு சிலசெயற்கைக் கருவிகளின் மூலம் ஒலி கேட்கும்படியாகச் செய்யலாம்.

பிறவியிலேயே காது கேளாத குழந்தையாகப் பிறப்பதற்கும் பல காரணங்கள் உண்டு.

1 பெற்றோருக்கு வெட்டை, மேக நீர் போன்ற நோய்களால் கெட்ட இரத்தம் இருப்பது

2 மிகவும் நெருங்கிய உறவினர்களுக்குள் திருமணம் செய்வது பிறக்கும் குழந்தைகளுக்கு கெடுதல்.

3 தாய் கருவுற்று மூன்று தினங்களுக்குள் சிலநோய்களுக்கு ஆளாவது.

4 சாப்பிடக்கூடாத கருச்சிதைவு மருந்துகளைத் தாய் உண்பது.

என்றிப்படிப் பல காரணங்களால் குழந்தையின் கேட்கும் உறுப்புகள் பாதிக்கப்படலாம் சில குழந்தைகள் பிறவியில் நல்லஉறுப்புகளுடன் பிறந்தும், இடையில் ஏதாவது காது நோய்கள் வரப்பெற்றுஅவைசரியான முறையில் மருத்துவம் செய்யப்படாமையால் கேட்கும்திறமையைஇழந்து விடுதலும கூடும்

" ஆட்டோ சுகிளிரோசிசு " (Otosclerosis) என்ற ஒரு நோயை கண்டு பிடித்து இருக்கிறார்கள் மேலை நாட்டார். இது ஆண்களைவிடப் பெண்களைத்தான் அதிகமும் பாதிக்கிறது. இருபது அல்லது இருபத்தைந்து வயதில் காதில் இரைச்சல் ஏற்பட்டு சிறிது சிறிதாக மந்தம் ஏற்படுகிறது ஒவ்வொரு மகப்பேற்றின் போதும் மந்தம் அதிகரிக்கிறது. ஆனால் நோய் வரும்போது சீழ்வடிதல் போன்ற வேறு எந்தவிதத் தொல்லையும் ஏற்படாது. அமெரிக்காவில் டாக்டர் சாமுவேல்ரோசன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று உலகம்முழுவதும் செய்யப்பட்டுவரும் ஒரு சிறுஅறுவைமருத்துவமுறையால் இந்நோயைக் குணப்படுத்த முடியும்.

காது கேளாத குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க நம்நாட்டில் மேலை நாடுகளைப்போல் வசதி இல்லை. இம் மாநிலத்தில் பாளையங்கோட்டை, திருவில்லிபுத்தூர் சென்னை ஆகிய மூன்று இடங்களில் செவிடர் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன இங்கே சைகை மூலமாகக் கல்வி அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இவர்கள் பேசிப் பழகும் வாய்ப்பின்மையால் பிற மக்களுடன் சேர்ந்து வாழும் தன்மையை இழந்து விடுகிறார்கள். ஒரு தனி இனமாகவே வாழ்கிறார்கள். மேல் நாட்டிலோ செவி மந்தமான குழந்தைகளைக் கைச்சாடை செய்யும் பழக்கத்தினின்றும் மாற்றி வாயால் பேசிப் பழகும் வழியில் புகுத்தி, காதில் ஒலி அதிகமாகக் கேட்கும் கருவியை(Hearing aid)கொடுத்து பேசும் மனிதர்களாக ஆக்குகிறார்கள். இவர்கள் சாதாரண மக்களுடன் சமுதாயத்தில் சேர்ந்து வாழமுடிகிறது. கைச் சாடையினால் பயிற்சி கொடுப்பது (Manualism) கூடாது; வாயால் பேசும் பயிற்சி (Oralism) தான் வேண்டும் என்று 1880ம் ஆண்டிலேயே மிலான் நகரத்தில் கூடிய "காது கேளாதவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள்" மாநாட்டில் முடிவுசெய்து நாகரீக நாடுகளில் எல்லாம் ஒப்புக்கொண்டு, நடைமுறைக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

செவியில் பொருத்தக்கூடிய கேட்கும் கருவிகளைக் கொண்டு, அநேகமாக செவிடர்கள் என்று அழைக்கப்படுபவர்களில் பெரும்பாலோர் பயனடைய முடியும். உதட்டின் அசைவுகளைக் கூர்ந்து கவனித்து பேச்சைக் கண்டுபிடிக்கும் திறமையைப் பலர் பயிற்சியால் பெற்றுவிடுகின்றனர். ஓரளவுக்கு இப்பயிற்சியும் கருவிகளும் சேர்ந்து அநேகமாக எல்லாச் செவிடர்களுமே பயனடையும்படிச் செய்திருக்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)

... "உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" என்னும் ஒரே குறளுக்கு தோன்றிய நாள் தொட்டு அண்ணல காந்தியடிகள் ஒருவர் தான் வாழ்ந்தார் என்று சொல்லப்படுகிறது. எஞ்சியுள்ள குறட்பாக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ (தனிக்குறளுக்கு இருந்தாலே சாலும்) உறுதுணை செய்யும் "குறள்நெறி" ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி நூல் போல் நீண்டு ஞாலத்தின் கண்ணுள்ள எல்லா மக்களும கண்ணுற்றுப் பயனடைய எனது இனிய வாழ்த்துக்கள் பல கோடி.

— வெ. பா இராமசாமி
க்ருமன் செட்டிகாடு, சேலம்

... அரசியல் வேறுபாடு காரணமாக "செந்தமிழ் காக்கச் செந்தீ மூழ்கிய செம்மல்" சின்னச்சாமியை தற்கொலை செய்து கொண்டவன் தியாகியா? எனப்பொதுவுடமைக்கட்சி நாளிதழ் எழுதியுள்ளதுஇதுதான் பொதுவுடமைக் கட்சியின் தமிழ்த் தொண்டு போலும்

இரா. கு. இராமசாமி,
இராவத்தூர்

பொதுவுடைமைக் கட்சியினர் தியாகத்தின் பெருமையை அறிந்து போற்றுபவாகள் என்பதை நாம் நன்கு அறிவேமே. கட்சிக் கொள்கை வேறுபாடு காரணமாகத் தியாகச் செயலைப்பழித்துக் கூறுதல் என்றும் நன்று அனறு என்பதை அவர்கள்அறிவார்கள். அங்ஙனமிருந்தும் தமிழ்ப்பற்றின் காரணமாகஉயிர் நீத்த செம்மல சின்னச்சாமியைப் போற்றாது இகழ்வது எதனால்? கொள்கைப் பற்றுக்காக எதனையும் இழத்தல் தான் மேலோர் செயல் செம்மல சின்னச்சாமி செந்தமிழ்க்காக்க உயிர்விட்ட செம்மனச்சான்றோர் என்பதில எட்டுணையும் ஐயமில்லை. தூற்றுவோர்தூற்றினும் தூயோர் செயல் என்றும் போற்றப்படும்.

மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின்

குறள் நெறி

மலர் 1 திருவள்ளுவராண்டு 1995 மாசி 18 (1–3–64) இதழ் 4

வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

இந்தியை எதிர்ப்போர் தென்னாட்டில் இலரா?

தமிழ்நாட்டு முதல் அமைச்சர் அவர்கள் வடநாடு சென்று திரும்பிவந்ததும் செய்தியாளர்களிடையே, "**தென்னாட்டில் இந்தியை எதிர்ப்பார் இலர்**" என்று கூறிவிட்டு "**இந்தியை எதிர்ப்பவர்களும் அரசியல் நோக்கம் கொண்டுதான் எதிர்க்கின்றார்கள்**" என உரைத்துள்ளதாகச் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளது.

இந்திமட்டும் இந்தியக்கூட்டரசின் மொழியாக ஆவதையும், அது மாநிலங்களில் மறைமுகமாகத் திணிக்கப்படுவதையும் அறிஞர்களும் அரசியல் தலைவர்களும் புலவர்களும் கல்வியாளர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் நாளும் எதிர்த்துவருகின்றார்கள் என்பது நாடறிந்த செய்தியாகும். அங்ஙனமிருந்தும் நம் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் இட்லரின் முறையைப்பின்பற்றி "இந்தியை எதிர்ப்பார் இலர்" என்றுஉண்மைநிலைக்கு மாறாகக்கூறிவருவது மக்களாட்சிமுறை நெறிக்கு மாறானதாகும் என்பதை முதிர்ந்த அரசியல் தலைவராகும் அவர்க்கு நாம் எடுத்துக்காட்டவேண்டியதின்று.

இன்றுள்ள சூழ்நிலையில் "இந்தி படித்தால்தான் நடுவிட அரசின் பதவிகிட்டும்" என்றும் "வட நாட்டில் பணிபுரியும் வாய்ப்புக்கிட்டும்" என்றும் கூறிச் சிலர் இந்தியைக் கற்குமாறு மக்களைத் தூண்டுகின்றனர்.

இந்தியக் கூட்டரசின் ஆட்சி மொழியாகவும் அலுவல் மொழியாகவும் இந்தி மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றவரையில் "இந்தி படித்தால்தான் வாழ்வு உண்டு" என்று கருதுவது உண்மை நிலையோடு பொருந்தியதாகத்தான் தோன்றும். வாழ்வு மட்டும் பெரிது என்றால் ஆங்கிலேயர் ஆட்சியை அகற்றிடப் போராட்டம் நடத்தியிருக்க வேண்டாமே. "ஆங்கிலம் கற்றால் உலகம் முழுதும் வேலை தேடலாமே" என்றுகூறி ஆங்கிலத்தை இந்நாட்டுமொழியாக என்றும் நிலைக்கச் செய்திருக்கலாமே. செய்தோம் இலையே! அங்ஙனம் செய்திருந்தால் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, தன்மானம் ஆயவற்றுக்கு மாறுபட்டதாகி மற்றையோரால் இகழப்படும் நிலையை அடைந்திருப்போம் அன்றோ? ஆகவே ஆங்கிலத்தை அயல்மொழியாகக் கருதுவதுபோலவே இந்தியையும் இந்தி வழங்காத மாநிலத்தார் அயல்மொழி எனக்கருதுவதில் தவறு இன்று அன்றோ? ஆனால் பதினான்கு தேசிய மொழிகளுள் ஒன்றாக இந்தியும் இருப்பதனால் ஆங்கிலத்தினும் இந்தியை நம் மொழியெனக் கூறிக்கொண்டு கற்பதற்கு உரிமை இருக்கின்றது. அதேபோன்று இந்தி மொழியாளரும் ஏனைய மொழிகளுள் ஒன்றையோ பலவற்றையோ கற்க உரிமையும் உறவும் கொண்டுள்ளனர். ஆனால் இன்றைய நடைமுறையில் இந்திமட்டுமேஇந்தியக்கூட்டரசு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் காரணமாக இந்தியக் கூட்டரசு, மக்கள் அனைவரும் இந்தி கற்றல் வேண்டுமென வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கட்டாயப்படுத்திவருகின்றது. தேசியமொழிகள் எனஒப்புக்கொள்ளப்பட்ட அனைத்தையும் ஒப்பக்கருதாமல் இந்திக்கே முதன்மையளித்து வருவது மட்டுமன்றிக் கூட்டரசின் ஒற்றை மொழியாகக் கொண்டுள்ளமை அண்மை நிகழ்ச்சியால் வெளிப்பட்டுவிட்டது. அவ்வண்மை நிகழ்ச்சியாவது, கூட்டரசுத் தலைவர் இந்தியைத் தவிர ஏனைய தேசிய மொழிகளில் கூட்டரசுப் பாராளுமன்றில் உரை நிகழ்த்தலாகாது என உரைக்கப்பட்டதாகும். ஆகவே இந்திமொழிக்கு அளிக்கும் தனிமுதன்மையை ஏனையதேசியமொழியாளர்கள் தடுத்துநிறுத்த கடமைப்பட்டவர்களாகின்றனர்.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களில் (காங்கிரசுக்குள்) இந்தி முதன்மையை விரும்பாதவர்கள் உளர். ஆனால் கட்சிக்கட்டுப்பாட்டினால் உண்மையை வெளிப்படையாக உரைக்க அஞ்சுகின்றனர்.

பொது உடைமைக் கட்சியினர் உருசிய நாட்டை முன்மாதிரியாகக் காட்டி ஆங்கு ஏனையதேசிய மொழிகளிலும்உருசியமொழிஒன்றுக்கேமுதன்மை என்று கூறி அதேபோன்று இங்கும் இந்திக்கே முதன்மை என்று கூறிவருகின்றனர். ஆனால் உருசிய மொழியோடு இந்தியை ஒப்பிடமுடியாது என்பதை மறந்துவிட்டனர். உருசிய மொழியை நம் நாட்டு மக்கள்கூட வாய்ப்பும் வசதியும் இருப்பின் கற்றல்வேண்டுமென்பது நமது கருத்து. இன்று உலகஅரங்கில் ஆங்கிலத்தையும்வென்று முன்னேறி வருகின்றது உருசிய மொழி. உருசிய மொழி வழியாக உலகில் வளர்ந்துவரும் அறிவியல் செல்வங்களைப் பெற்றுவிடல் முடியும். ஆகவே சோவியத் நாட்டினர் மட்டுமன்றிப் பிற நாட்டினரும் கற்க வேண்டிய தகுதிப்பாடுடைய உருசியமொழியோடு இந்தியை ஒப்பிட்டு இந்திக்கு ஏனைய தேசியமொழிகளைவிட முதன்மை கொடுக்க வேண்டுமென்று கூறுவதும் அதை அனைவரும் கற்கவேண்டுமென்று வற்புறுத்தி வருவதும் மாநிலங்களின் தன் ஆட்சி உரிமைக் கொள்கைக்கு மாறுபட்டது என்றே கருதுகின்றோம். அன்றியும் உருசியாவில் அனைத்துத் தேசிய மொழிகளுக்கும் அளிக்கும் உரிமையும் வாய்ப்பும் இந்தியக் கூட்டரசில் அதன் தேசியமொழிகட்கு அளிக்கப்படவில்லை என்பதை மறுத்தல் இயலாது; மறைத்தல் கூடாது.

பரதகண்டமாம் இப்பெருநிலப்பரப்பில்அமைந்துள்ள கூட்டரசின் மொழியாக ஒன்றைமட்டும் ஏற்றுக்கொள்வது, அதுவும் எவ்வகையாலும் வளர்ச்சி பெறாத வளமற்ற இந்தியைமட்டும் ஏற்றுக்கொள்வது என்பது இந்திமொழிச்செல்வாக்குக்கும், ஏனைய தேசியமொழிகளின் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் அடிகோலுவதாகும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

ஆகவே நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் உடையோர் அனைவரும் தம் மாநிலத்திற்கும் மொழிக்கும் வர இருக்கும் தீங்கைக் கருதிக் கட்சிவேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டுச் செயல்படவேண்டுமென்று உள்ளன்போடு வேண்டுகின்றோம்.

★ இந்தி முதன்மையைத் தடுப்போம்

நாம் எவ்வித அரசியல் நோக்கமுமின்றி இந்தி முதன்மையைத்தான் எதிர்க்கின்றோம். ஆனால்விரும்பி இந்தி படிப்பதையன்று என்பதைத் தெளிவாகக் கூறுகின்றோம்.

"வேலை வாய்ப்புக்கென இந்தி படியுங்கள்" எனச் சிலர் கூறிவருவதும் பொருந்தாது. ஏனெனில் ஆங்காங்கு மாநில உணர்ச்சி மிகுந்து அந்தந்த மாநிலத்தில் அந்தந்த மாநிலத்தைச்சேர்ந்தவர்கட்கே இடம் என்ற கோட்பாடு வலுப்பெற்று வருகிறது. தமிழ் மாநிலத்தைச் சேர்ந்தவர்க்கு எங்கும் வேலை என்பது நடைமுறையில் ஒத்துவராது. அதற்கு இந்தி வேண்டும் என்பதும் பொருந்தாது. எந்த மாநிலத்திற்குச் செல்ல விரும்புகின்றோமோ அந்த மாநில மொழியைக் கற்றல்தான் தகும். ஆகவே வேலை வாய்ப்பின் பேரால் இந்தி படிக்கவேண்டும் என்று கூறுபவர்கள் உண்மை நிலையை உணர்ந்து இந்தி முதன்மையைத் தடுக்க முன்வருவார்களாக.

இந்தி மட்டும் முதன்மைபெறும் நிலை உறுதிப்படாது தடுக்க ஆவன செய்ய மடிதற்று முந்துறவேண்டும். இன்றேல் தமிழின் நிலையும் தமிழ்நாட்டு நிலையும் என்னாகுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

ஆங்கில முதன்மையால் தமிழ் அடைந்த இழிநிலையை நாம் அறிவோம். ஆங்கிலமாவது அறிவு வளத்திற்கும் உரிமை உணர்வுக்கும் உரன் ஊட்டியது. அத்தகைய ஆங்கிலத்தை-இன்னும் பல ஆண்டுகட்குக் கற்றுத் தீரவேண்டிய ஆங்கிலத்தை-அகற்றி அதன் செல்வாக்கிலிருந்து விடுதலை பெறப் போராடிக்கொண்டிருக்கும்போது அதன் இடத்திலே அமர்ந்து நம்மை அடிமைப்படுத்தும் நிலையை எத்தகுதியும் இல்லாத இந்திக்கு எவ்வாறு கொடுக்க முடியும்?

"இந்திக்கு அடிமையாகி இறப்பதைவிட இப்பொழுதே இறந்துவிடுவது மேல்" என எண்ணி எரியில் மூழ்கி இறந்த செம்மல் சின்னச்சாமியின் வீரச் செயல்கூடத் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிலதே. என்னே கொடுமை! உண்பதும், உடுப்பதும், பதவிகளைப் பெறுவதும்தான் வாழ்வா? விழியினும் இனியமொழியை இழந்துவாழ்வது எற்றுக்கு? தமிழ்மொழி அழிந்தபின்னர் தமிழர் என்ற பெயர் நமக்கு ஏது? நமக்குப்பெயர் மட்டும் இருந்தாலும், "நாமமது தமிழர் எனக்கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?" ஆகவே இந்தி முதன்மையைத் தடுத்துத் தமிழைக் காக்க ஒன்றுபடுவீர்களாக. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'.

நம் அருமை முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் அரசியல் நோக்கமின்றி - அரசியலைச் சாராது இந்தி முதன்மையை எதிர்ப்போர் உளர் என்பதை இனியேனும் அறிந்து, எதிர்ப்போர் கூறும்காரணங்களைக் கேட்டு ஆவன செய்து தமிழைப் போற்றித் தமிழ் கூறும் நல்லுலகத்தின் நன்றிக்கு உரியராக வேண்டுகின்றோம்

சேக்கிழார் மரபில் வந்துள்ள நம் முதல் அமைச்சர்க்குச் செந்தமிழைக் காக்கும் சீரிய கடனும் உண்டு என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.

'அசைவில் செழும் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல'

எனும் சேக்கிழார்பெருமானின் திருவிருப்பம் நிறைவேறப் பணிபுரிதல் அவர்க்கும் ஏனையோர்க்கும் தலையாய கடனாகும்.

தமிழ்ப் புலவர்கட்கு வேண்டுகோள்.

தமிழ்நாட்டில் தமிழ் இன்னும் தனக்குரிய இடத்தை அடையவில்லை. ஆங்கிலேயர் ஆட்சி அகன்றுவிட்டபோதும் ஆங்கில மொழியாட்சி இன்னும் அகன்றிலது. ஆங்கிலேயர் ஆண்டகாலத்தைவிட இன்று ஆங்கிலம் போற்றப்பட்டும் மதிக்கப்பட்டும் வருகின்றது. தமிழை இந்நாட்டின் ஆட்சிமொழி என ஒப்புக்கொண்டுள்ள போதிலும் தமிழைக்கற்றுப் புலமையடைந்தோர்களைத் தக்கவாறு பயன்படுத்தும் சூழ்நிலை இன்னும் உண்டாகவில்லை தலைமையிடத்தில் இருப்போரெல்லாரும் ஆங்கிலப் பற்று மிகுந்தோராய்த் தமிழ்ப்பற்றும் அறிவும் குறைந்தோராய் இருப்பதனால் தமிழை எள்ளி இகழ்ந்துஒதுக்கும் நிலையிலேயேஉள்ளனர், ஆகவே இச்சூழ்நிலையில் தமிழைப் போற்றிவளர்த்து அதற்குரிய இடத்தை அடையுமாறு செய்வதற்குரிய பொறுப்பும் கடமையும் தமிழ்ப் புலவர்களையே சாரும்.

தமிழ்ப்புலவர்கள்தாம், தமிழால் தமிழுக்காக வாழ்பவர்கள் என்று கருதப்படுகின்றனர். தமிழர் அனைவர்க்கும் தமிழ் உரியது என்றாலும் தமிழ், தமிழ்ப்புலவர்க்குத்தான் உரியது எனத் தமிழ்ப்புலவர் அல்லாதார் கருதித் தமிழைப் புறக்கணித்து வருகின்றனர். ஆதலின் தமிழ்ப்புலவர்கள் விழிப்புடன் இருந்து அயராது தமிழ்ப்பணியில் ஈடுபட வேண்டும் எனச்குறிப்பிட விரும்புகின்றோம். மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் நல்ல தமிழார்வத்தை உண்டுபண்ணித் தமிழ் நூல்களைக் கற்றுத் தெளியுமாறு செய்தல் வேண்டும். சிறப்பாகத் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் தமிழர் யாவரும் கற்றுணரத் தம்மாலியன்ற பணியைச் செய்தலைப் பிறவிக்கடனாகக் கொள்ளுதல் வேண்டும். புலவர்கள் தம் கல்வி அறிவு ஒழுக்கங்களால் மக்களிடையே செல்வாக்குப் பெறுதல் வேண்டும். தம்மோடு ஒத்த புலவர்களைப்பற்றிப் புறம் கூறுதலும் பழித்துரைத்தலும் கனவிலும் கருதுதல் கூடாது.

இன்றைய புலவர்களில் சிலரிடம் இவ்விழிகுணங்கள் இருப்பதாகச் சிலர் எண்ணுகின்றனர். இவ்வெண்ணத்தை மாற்றி எல்லாப் புலவர்களும் ஒருடல் போன்ற ஒற்றுமையினராய்த் தமிழின் உயர்வுக்காக வாழத் தலைப்படுதல் வேண்டும்

தமிழ்ப்பெருநூல்களையும், தமிழ்ப்புலவர்களையும் குறை கூறினால்தான் தம் அறிவுநலம் வெளிப்படும் எனக்கருதிச் சிலர் அவ்வாறு செய்ய முற்பட்டுத் தம் அறியாமையைவெளிப்படுத்துகின்றனர்; தமிழ்ப் பகைவர்க்குப் பயன்படு கருவியாய் அமைந்து, தம்மைப் பாழ்படுத்திக்கொள்வதோடு தமிழின் அழிவுக்கும் அடிகோலுகின்றனர்.

ஒரு மொழிக்கு உயர்வும் தாழ்வும் அம்மொழியாளர்களால்தான் ஏற்படுதல் வேண்டும். ஆங்கில மொழிக்கு உயர்வு ஆங்கிலேயர்களால்தானே ஏற்பட்டது. அதுபோல் நம்மொழிக்கு உயர்வும் நம்மால்தான் உண்டாக வேண்டும் தமிழ்மொழி உயர்நிலை பெறவில்லையென்றால் நாமும் இன்னும் உயர்நிலை பெறவில்லை என்று கருதிடல் வேண்டும். ஆதலின், ஒல்லும் வகையால் உறுபணியாற்றத் தமிழ்ப் புலவர்கள் முந்துறுதல் வேண்டும்.

வம்மின் புலவீர்! வண்டமிழ் காக்க எழுமின்.

செந்தமிழைக் காப்போம். ★

சிறு கதை

கோ. மோ. கர்ந்தி, எம்.ஏ.

நீலவானத்தில் ...

என் வாழ்வின் நிலை என்னைக் கலங்க வைத்தது- அதற்காக நானே இரங்கினேன்.

திருமணமாகி எட்டு மாதங்கள் தாம் ஆகின்றன...... ஆனால் அதற்குள்... எவ்வளவு மாறுதல்கள்...! என் நிலையே மாறிவிட்டதுபோல் தோன்றுகின்றதே! எப்படி வளர்ந்தேன்... ஆனால் இப்போது ..?? எவ்வளவு மாறிவிட்டேன் . என் உள்ளமே அடியோடு மாறிவிட்டதா...?? எத்தனை மாறுதல்கள் !! இப்படி மாறிவிடுவேன் என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லையே.

எல்லாம் கனவு மாதிரித்தான் தோன்றுகிறது ஆம்...! தன் சட்டையைக் கழற்றும் பாம்பு மாதிரி நானும் என் உள்ளத்தின் நிலையை மாற்றியமைத்துக் கொண்டிருக்க வேண்டும் .. ஆம்! என்னையறியாமலேதான் அப்படிச் செய்திருக்கவேண்டும். எப்படிச் செய்தேன் என்று எனக்கே தெரியவில்லை... ஆம்... தெரியமுடியவில்லை.

திருமணமாவதுவரை நடந்துவந்த என் வாழ்வுக்கும் அதன் பின்னர் துவங்கிய வாழ்வுக்கும் எத்தனை வேறுபாடுகள் ..!? வாழ்வை மலர வைப்பதுதான் திருமணமென்கிறார்களே ! ஆனால் அது என் வாழ்வைப் பொறுத்தவரையில்......??

எவ்வளவு அன்பாக வளர்ந்தேன் என் தந்தையும் தமையனும் என்னிடம் தங்கள் உயிரையே வைத்திருந்தார்கள் என்றுதான் கூறுவேன் தங்கள் கண்களின் இமைகளுள் வைத்துத்தான் என்னைக் காத்துவந்தார்கள். என் உள்ளம் கலங்க எதையும் செய்யத் துணியார்கள் .. ஆம்! என் நினைவு எழுந்த காலத்திலிருந்தே இதுதான்.. ஒரேஅன்பு!ஒரே பாசம்! தங்கள் அன்புணர்ச்சியால் என்னைத் தங்களுடன் பிணைத்துவிட்டார்கள்...

ஆம்! அதனால்தான் வந்த வினை .? ஏன் இத்தனைப் பாசம்? ஏன் இவ்வளவு அன்பு...? இன்று நான் படும் துன்பத்திற்கு இவர்கள்தான் காரணம் எனக் கூறுவேன்... ஆம்! இவர்கள்தாம்...! உண்மையான உலகத்தைத் தங்கள் அன்பைக்காட்டிவேறு வகையாகச் சித்தரித்தனர். துன்பத்தைத் தர மறுத்தனர்... .. அதனால்தான் இத்தனை துன்பம்... நானும் அறியாத பேதையானேன்.

உலகம் அன்பு மயம் என்றுதான் எண்ணினேன். என் அன்புஅண்ணா, என் அருமைத் தந்தை, என்னையே தேடிக்கொண்டிருக்கும் என் தாய் – யாவரும் இதையேதான் கூறினர். இதையேதான் என்னிடம் காட்டினர். இதனால்தான் இந்தப் பயங்கர உலகத்தை நான் மறந்தேன். வாழ்வெல்லாம் இன்பமயமாகவே எப்போதும் விளங்கும் என்று கருதினேன். உலகமக்களனைவரும் தம் பெற்றோர் போன்றுதானிருப்பர் என்று கனவுகள் பல கண்டேன். ஆனால்...

விரைவிலேயே உலகம் அன்புமயமானதல்ல என்று உணர்ந்தேன்; யாவரும் என் பெற்றோர் போன்றவர்கள் அல்ல என்பதை உணர்ந்தேன்; வாழ்வு இன்பமயமானது என்பது பொய் என்பதையும் நன்குணர்ந்தேன்.

ஆம்! இதுவரையிலும் என் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த ஒரு திரை விலகியது; என் உள்ளத்தை மறைத்துக்கொண்டிருந்த ஒரு வகை இருள் வெருண்டுவெருண்டு ஓடியது; அதன் நடுவே என் உயிர் துடித்தது; அதன் துடிப்பிலிருந்து ஒளியுள்ள சிவந்த இரத்தத்துளிகள் பளபளக்கும் கண்ணீர்த்துளிகளாக மாறி சொட்டுச் சொட்டாக இந்த உலகத்தின்மேல் வடிந்துகொண்டிருந்தன.

என் கணவர் வீடுவந்த சில நாட்களிலேயே இந்த உண்மை விளங்க ஆரம்பித்தது. என் மாமியும் நாத்தனாரும் கூர்மையாகப் பார்த்தனர். திருடனைப் பார்க்கும் போலீசு அதிகாரியும் அவ்வாறுதான் பார்ப்பார். நான் திகைத்தேன். என் இதயம் நின்று நின்று அடித்துக்கொண்டது. கொடிய வேடன் கையில் சிக்கிய அழகிய வெண்புறா தனது இறக்கையை படபடவென்று அடித்துக்கொள்ளுவதுபோலிருந்தது என் நிலை. என் உள்ளம் திணறியது! சுழலில் அகப்பட்டுக்கொண்ட என் உயிர் தத்தளித்தது. என் வாழ்வின் நிலையைப்பார்த்து நானே இரங்கினேன்.

என் மாமிதான் என் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த திரையைக் கிழித்தெறிந்தார்கள்.

"பார்வதி! இது உங்கள்வீடுஎன்று நினைத்து விடாதே! பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும் சிறு பிள்ளைத்தனமாக நடக்க இது இடமில்லை ... எப்படியோ உன்னை வளர்த்து விட்டார்கள் எதற்காக வளர்த்தார்கள் என்றே தெரியவில்லை"

என் மனம் தளர்ந்தது... ஆனால் என் மாமி தொடர்ந்தார்கள்.

"ஆனால் இங்கு எச்சரிக்கையுடன் நடக்கவேண்டும். என்ன தெரிகிறதா...?"

எதற்காக அடிக்கடி இவ்வளவெல்லாம் கூறுகிறார்கள் என்று கருதுவேன். ஒருவேளை வீட்டுவேலையில் நான் தகுதியில்லையென்றா? அல்லது அவர்களிடம்-வயதில் குறைந்த என் நாத்தனாரிடம் கூட - பணிவுடன் நடந்துகொள்ளவில்லை என்றா? அல்லது .. எனக்கே காரணம் புரியவில்லையே. வயதிற் பெரியவர்கள் - என் கணவரின் தாய்-என் மனதை அடக்கிக்கொள்ளுவேன். என் அமைதியால் அவர்கள்பேச்சு வளர்ந்துகொண்டே போகும் என் அன்னை தந்தையைக் குறைகூறுவார்கள். திருமணத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் குறையாகக் கூறுவார்கள். என் நாத்தனார் தூபம் போடுவார்கள். என் தந்தையைப்பற்றியும் அன்பான அண்ணாவையும் அவர்கள் குறையாகக் கூறும்போது என் மனம் வேதனையால் துடிக்கும். என் மேல்தோலை சிறிது சிறிதாக உரிப்பதுபோலிருக்கும். என் வேதனை தாங்கமுடியாமல் என் கணவரைப் பார்ப்பேன். என் கணவர் தன் தலையைக் குனிந்துகொண்டே தன் நிலையினின்றும் விடுபட விரும்பாதவர்போல் தோன்றுவார். திக்கற்ற நிலையில் நிற்பதுபோல் உணருவேன் .. ஆழமான பாதாளத்தில் விழுந்துகொண்டிருப்பதுபோன்ற உணர்வு என்னுள் எழும். எனக்கு உதவியாக ஒருவர்கூட இல்லையே என்பதை அறிய என் மனம் பதறும். என்னைச் சூழ்ந்து வளர்ந்திருக்கும் ஒரு வகை இருள் என்னைத் தாக்க வருவதுபோல் தோன்றும். சன்னல் வழியே வெளியே பார்ப்பேன். பரந்த வானம் நீலநிறத்துடன் தெளிவாகத் தெரியும். அதையே கூர்ந்து நோக்குவேன்.

சட்டென்று என் தந்தையின் நினைப்பு வரும். என் உணர்ச்சிகள் மாறும். என் நெஞ்சில் யாரோ எதையோ அடைப்பதுபோல் தோன்றும். 'ஓ'வென்று அழுவேன்... விக்கி விக்கி அழுவேன். மனதின் கொடிய பளு பாகாய் உருகி கண்களினின்றும் பாயும் அருவியாக மாறும். ஒரு கணம் என் கணவர் வீடே அமைதியாகயிருக்கும். ஆனால் மறுகணம் என் மாமியின் குரல் வெறியுடன் எதிரொலிக்கும்.

"என்ன? இதற்கா அழுகிறாள்... கண்ணீர் வடிக்கிறாளாம்... எல்லாம் நீலிக் கண்ணீர்... ஏன் இந்தக் கண்ணீர்...? இங்குள்ள யாவரையும் இந்தக் கண்ணீரால் ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணமா...? பாரடா உன் மனைவியை ...! இப்படிப்பட்டவள் என்று முன்னரே தெரியாமற்போயிற்றே...! இப்போதே இப்படி யிருக்கிறது... இனிமேல் என்னவெல்லாமோ...!!" என்று என் கணவரைப் பார்த்துக் கூறுவார்கள். என் நாத்தனார் எதையோ 'முணமுண'ப்பார்கள்.

என் கணவர் இதையெல்லாம் கேட்டுக்கொண்டு தானிருப்பார். மெதுவாகத் தன் தலையை என் பக்கமாகத் தூக்குவார். ஏனோ மீண்டும் தலையைக் கவிழ்ந்து கொள்ளுவார். அவர் வலதுகை அவர் சிதறிய கேசத்தை வருடிக்கொண்டிருக்கும்... நான் என் அமைதிக்குள் புதைந்து கிடப்பேன்.

(அடுத்த பக்கம்)

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆம்! இத்தகைய கணவருடன் வாழவேண்டும்! படித்திருக்கிறார். பட்டம் பெற்றிருக்கிறார்...நல்ல வேலை... ஆனால் என்ன? தன் மனைவி படும் துன்பத்தை அறிய விரும்பாதவர் என்றுதான் கூறவேண்டும். எனது அமைதியையே இவரால் அறிய முடியவில்லையே... அல்லது அறியத்தெரியாதா? தன் கண்களையும் காதுகளையும் நம்பாது அமைதியில் வாழ்வை நடத்தும் தன்மனைவியிடம் ஒரு அன்பான சொல்...ஆறுதலான வார்த்தை ..? ஏன்தான் இப்படியிருக்கிறார்..? தன் தாயின் அறிவற்ற சொல்லுக்கு முன் தன் அறிவைப் பணயம் வைக்க முயலுகிறாரே... இவரும் திருமணமானவராம்... ஒரு பெண்ணைப்பற்றி — அதுவும் அவர்களுக்காக மாடாக உழைத்துக்கொண்டிருக்கும் ஒரு பெண்ணைப்பற்றி, அவள் உள்ளத்தைப்பற்றித் தெரியாத, தெரிய முடியாத ஒருவர் .....! என்மீது குறையிருந்தால் கண்டிக்கட்டுமே........ "பார்வதி ஏன் இப்படிச் செய்தாய்? ஏன் அப்படிச் செய்யவில்லை..?" என்று என்னிடம் கூறலாமே! ஆனால் அவர் கூறுவதற்குத்தான் இடமளிப்பதில்லையே அதனால்தான் என்னவோ அவர் தாய் கூற முற்படுகிறார்கள் போலும்! ஒரே பேச்சு...நச்சுப்பாம்பு தன்விடமனைத்தையும் ஒரேவேளையில் கக்குவது போல்தான் அவர்கள் பேச்சு வெளிப்படும். நான் நடுங்குவேன். அத்தனை கொடிய பேச்சு அவர்கள் பேச்சைப் பார்த்தால் வேண்டுமென்றுகூறுவது போல்தானிருக்கும் ஏதோ ஒன்று அவர்களுள்ளிருந்து கொண்டு அவர்களையே துன்புறுத்துவது மாதிரியிருக்கும். ஒருவேளை நான் என் கணவரை என் கைப்பாவையாக்கிவிடக் கூடாதே என்ற அச்சமாகயிருக்கலாம், அல்லது தன் மகளின் நச்சுக் குணங்களை வெளிக் காட்டவிடாமற் செய்ய என்னைக் குறை கூறலாம். அல்லது தன் ஆணவத்தை காட்டவுமிருக்கலாம்.. ஏன் இப்படித் தன்னையே துன்பப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொள்வேன். நான்தான் எந்தவகைத் தீமையையும் நினைக்கவில்லையே..!

திருமணமாவதற்கு முன்னர் என்னவெல்லாமோ எண்ணினேன். எங்கள் கல்லூரி உளவியல் ஆசிரியர் மணவாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது என் மனம் சிலிர்க்கும். என் வாழ்வைச் சிறந்த வகையில் நடத்த வேண்டும் என்று என்னிடம் கூறிக் கொள்வேன். இயைந்த வாழ்வு! கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் அறிந்து ஒழுகும் வாழ்வு! மற்றவர்களின் குறைகளைப்பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அவர்கள் நலனையே கருதி பெருந்தன்மையாகப் பழகும் வாழ்வு... இதயத்திற்குகந்த வாழ்வு.. இதயத்தை வளர்க்கும் வாழ்வு ... இன்ப வாழ்வு ஆனால்...??
என் எண்ணங்களெல்லாம் சிதறி விட்டன. கண்ணாடி உடைந்து சிதறுவதுபோல் சிதறி விட்டன நான் என்ன நினைத்தேன்...? ஆனால்இன்று நடப்பது...'?

ஆம்! சோதனையாய்த்தானிருக்க வேண்டும்! என் உள்ளத்தைச்சோதனை செய்வதற்குத்தான் இந்த வாழ்வு அமைந்திருக்கிறதுபோலும்! கந்தகக் காடியில் துத்தநாகம் விழுந்தவுடன் ஏற்படும் கொந்தளிப்புப் போன்றுதான் என்வாழ்வுஅமைந்திருக்கிறது! ஒரே வேதனை... என்அறிவைச்சோதனையிடுவது போன்றுதான் என் சூழ்நிலை அமைந்திருக்கிறது. அது ஓர் இருள் போன்று என்னை நேருக்குநேர் பார்ப்பதுபோல் உணர்ந்தேன். என் வலுவனைத்தையும் சோதனை செய்வது போன்றிருந்தது அது...

நாட்கள் ஒன்றின் பின் ஒன்றாக மறைந்து கொண்டிருந்தன. என் நிலையிலும் பல வகை மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. முன்னர் துன்பத்தைக்கண்டு வெருண்ட நான் இப்போது வெருளவில்லை. என் மாமியின் விடச் சொற்கள் என்னை முன்பு விரட்டின. கத்தரிப்பிஞ்சுத்துண்டுகளை எண்ணெயிலிட்டு வாட்டும் போதெல்லாம் என்நிலையை நான் எண்ணிக் கொள்ளுவேன். ஒரு விநாடியில் 'சர்ர்ர்...' என்று துவண்டு விடும். பின்னர் ஒரு நிலையை அடைந்ததும் சுருண்டு வதங்கி அமைதியாகிவிடும். அதே போன்றுதான் என் நிலையும் என்று எனக்குள் கூறிக்கொள்ளுவேன்.

என் நாத்தனார் நேரடியாகவும் மறைமுகமாகவும் என்னை வதைத்தார்கள், ஆம்! அது முன்னர் தான்! இப்போது அவர்கள் கூற்று என்னை வருத்துவதாகத் தெரியவில்லை.

என் கணவரின் செயலற்ற நிலையும் என்னை வருத்தவில்லை தன் மிருக உணர்ச்சிக்கு அடிமையாகி வெறிகொண்டு எழும் போதெல்லாம் என் உடலை அவர் தேடுவார், ஆனால் அந்த உடலில் புதைந்திருக்கும் உள்ளம் அவர் கண்களில் தென்படாது போலும்! இருட்டில் ஒளிந்திருக்கும் திருடன் போல நடந்து கொள்ளுவார் அவர் செய்கைக்காக என் அறிவு வெட்கித் தலை குனியும்.

யாரையும் குறை கூறநான் விரும்பவில்லை... அவர்கள் தரும் துன்பமும் என்னை வருத்துவதாகத் தெரியவில்லை. என் உள்ளத்தைச் சுற்றிலும் ஒரு வகைக்கவசம் அமைந்திருந்து எனக்கு வரும் துன்பத்தைஎன்னை அணுகச் செய்யவிடாது என்னைக்காப்பாற்றுவது போல் ஒரு சில வேளைகளில் உணருவேன். என் தனிமையில என் இறைவனைப் பணிவேன்- என் ஆதரவற்ற நிலையில் எனக்கு ஆறுதல் கூறும் தெய்வம் என்னைக் காத்து நிற்பதுபோல் உணருவேன். என் அறிவு அவன் முன்பு பணியும்; மனம் ஒன்றும்; உடல் புல்லரிக்கும்.

நாட்கள்செல்லச்செல்ல என்உடல் நிலையில் பல மாறுதல்களேற்பட்டன வலு குறைந்துவிட்டது! சிறு குழந்தைபோல் எங்கும் ஓடியாடி வளர்ந்த நான் இப்போது காற்றோட்டமில்லாத வீட்டில் அடைபட்டுக் கிடந்தேன். என் மாமியும் நாத்தனாரும் சுமார் நான்கு மணிக்கே வெளிச் சென்றுவிடுவர். கோயிலுக்குச் செல்லுவதாகத்தான் கூறிக்கொள்ளுவர். ஆம்! அவர்கள் கோயிலைத் தேடிச் செல்வர். என்கணவர் ஆபீசிலிருந்து வந்ததும், தன் கோபத்தை என்னிடம் காட்டுவார். பின்னர் 'காபி' அருந்தியதும் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே சென்றுவிடுவார். என்னைப்பற்றி எவரும் கவலைப்படுவது கிடையாது ஆனால் அவர்களுக்கு ஏதாவது குறை ஏற்படும்போது என்னை அதட்ட எவரும் தயங்கியதில்லை. நான் எதுவுமே கூறுவதில்லை. மிக மிக அமைதியாகிவிடுவேன். யாவரும் வெளிச்சென்றவுடன் பின் வாசலைத் திறப்பேன். அங்கு ஓடும் சாக்கடை என்னை விகாரமாகப் பார்க்கும், தேங்கித் தேங்கிச் செல்லும் அந்தச் சாக்கடையைப் பார்க்க பரிதாபகரமாகயிருக்கும்! அதைப்பார்க்க மனமில்லாமல் வானத்தைப் பார்ப்பேன். வானம் நீலமாக எங்கும் மலர்ந்து விரிந்து தெரியும்-அதையேபார்ப்பேன். ஏனோ என் கண்கள் மங்கும்; கண்ணீர் சுரக்கும். என் தாய் தந்தையரின் மென்மையான அன்பு வானத்தினின்றும் என் நிலையைப் பார்த்து ஏங்குவது போலிருக்கும். சட்டென்று என் அண்ணாவின் முகம் வானத்தில் தெரியும். "பார்வதி! எங்களையெல்லாம் மன்னித்துவிடு அம்மா!" என்று அவன் உதடுகள் அசையும். என் நெஞ்சம் விம்மும். உள்ளம் கொந்தளிக்கும். என் இதயத்தினின்றும் பல மின்னல்கள் தெறிக்கும் விம்மி விம்மி அழுவேன். அழுது கொண்டேயிருப்பேன். மலர்ந்த வானம்நான் அழுவதைப் பார்த்துக் கொண்டேயிருக்கும்......

மீண்டும் வானத்தைப் பார்ப்பேன் நீலவானம் என்னை ஊன்றி பார்ப்பது போல் உணருவேன். ஏனோ என் கண்களில் சுரக்கும் நீர் வற்ற ஆரம்பிக்கும் மனம் அமைதி பெறும். கொடிய புயலுக்குப் பின்னர் எழும் அமைதிபோல் ஒருவகை நிம்மதி என்னை வந்தணுகும். அந்த அமைதி நீலவானத்தின் அமைதியை என்னுடன் பிணைக்கும். என்னைமறந்த நிலையில் அதையேபார்த்துக்கொண்டிருப்பேன். என்னுள் எழும் ஓர் ஒளிஇந்த உலகத்தை விட்டுப் பிரிந்து பரந்த வானத்தில் நீண்டு சென்றுகொண்டிருப்பதுபோல் உணருவேன். அவ்வொளி ஓர் உணர்வாகவும் தென்படும். அவ்வுணர்வில் இன்பமில்லை, துன்பமுமில்லை, இரண்டுமற்ற ஒன்று அல்லது இரண்டுக்குமப்பாலாய் விளங்கும் ஒன்றாகயிருக்க வேண்டும். அது எதுவென்றே தெரியவில்லை. ஒருவேளை என்னை காத்துவரும் இறைவன் இந்தப் பாழுமுலகத்தினின்றும் என்னை அழைக்க நீட்டும் கையாகவும் ஏன் இருக்கக்கூடாது...?

அப்போதெல்லாம் நீலவானத்தில் திகழும் விண்மீன்கள் என்னைப்பார்த்துத் தன் கண்களைச் சிமிட்டும்!

(15—2—64 இதழின் தொடர்ச்சி)

திருக்குறளில் உருவகம்

— பேராசிரியர் வீ. ஒப்பிலி

இப்பொருள் **அரசனின் செங்கோலைக் குடிகள்** ஆர்வமுடன் எதிர் நோக்கி வாழ்தலின் உருவகமாகிறது. இம்முறையில் ஆராய்ந்தால், அரசர்க்கரசனை **இறைவனின் கருணையே** மழையாக மண்மீது பொழிகிறது எனலாம். அரசன் முறைதவறி கொடுங்கோலாட்சி செய்வானாகில், வானம் பெய்யாது என்கிறார் வள்ளுவர். கருணை வடிவான மழையும் இங்குத் தன்னிலைமாறிவிடுகிறது. ஒப்புரவின் உருவாயமைந்த மழை கொடுங்கோன்மையால் பெய்யாதுபோகிறது. அரசனது அருள் குன்றியழிந்தால் இறைவனின் கருணையும் குறைவதாக உட்பொருள் தோன்றுகிறது. இவ்வாறே உலகில் நன்மை குன்றுமாயின், நன்மையே உருவான மேகம் வெறுமையுற்றதாகக் காண்கிறார் வள்ளுவர். **வறண்ட மேகம்** சீருடைய செல்வர் உற்ற **வறுமைக்கு** உருவகமாகிறது.

பெய்யாது போனால் மழை அழிவின் அடையாளமாகிறது; காலத்தே பெய்யுங்கால், இது கெட்டார்க்குத் துணையாய் நின்று காக்கும் சின்னமாகிறது. இவ்வாறு மழை இறைத்தன்மைகொண்டுஇந் நிலத்தின் உயிரியக்கத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது.

மழை - மனைவி :— இனி திருவள்ளுவர் எடுத்துக்காட்டிய மழையின் குண நலன்களை மனத்திற் கொண்டு பின்வரும் குறளை உருவக முறையில் ஆராய்ந்து பார்ப்போம்.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (55)

கற்புள்ள மனைவியின் மாண்பை எடுத்துக்காட்ட, செயற்கரிய செயலைக்கூற விரும்புகிறார் கவிஞர். செயற்கரிய செயல் புரிந்த கற்புள்ள பெண்டிரின் புராணங்களும் பல உள்ளன. கதிரவனை எழாது மறைத்த நளாயினியையும், இயமனையும் வென்ற சாவித்திரியையும், முக்கடவுளரையும் சிறுகுழந்தைகளாக்கிய அனசூயையும் திருவள்ளுவர் அறிந்திருக்கமாட்டாரா? இருப்பினும் இக்குறளில் கற்பின் சிறப்பைக்காட்ட வேறு 'புராணம்' புனைகிறார். (Myth-making power) கவிஞர். கணவனைத் தெய்வமாகப் போற்றும் மனைவியை எண்ணிய கவிஞர் மழையை எண்ணுவதேன்?

வையத்துள் வாழ்வாங்கு வாழும் கணவன் வானுறைத் தெய்வமாகிறான். வாழ்க்கைத்துணை எனப்படும் இல்லாள் அவ்வாறே கணவனைத் தெய்வமாகப் போற்றுகிறாள். தெய்வம் என்ற சொல்லை இக்குறளில் பயன்படுத்திய வள்ளுவர், வானோர் உலகையும், அவர்தம் உணவான அமிழ்தத்தையும் பின் உலகிற்கு அமிழ்தமெனப்படும் மழையையும் நினைத்துப் பார்த்திருப்பார். மேலும் பருவத்தே பெய்யும் மழையின் குண நலன்கள் யாவும் கணவனையே தெய்வமெனத் தொழும் மனைவியின் குண நலன்களை ஒத்திருப்பதைக் காணலாம். பண்புள்ள மனைவி, உணவாகி உணவாக்குகிறாள்; பசி தீர்க்கிறாள்; குடும்பத்தைக் காக்கிறாள்; கணவனின் வாழ்க்கைக்கு உறுதுணையாக நிற்கிறாள். அவனிடமிருந்து பயனை எதிர்பாராது குறிப்பறிந்து சேவை செய்கிறாள். அவள் நற்பண்பு இழந்தால், மேகம் வறண்டதுபோல், குடிகெட்டு அழிந்துவிடும் என்ற பொருளும் தோன்றுகிறது. இவ்வாறு இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகளையுடைய மனைவி கவிஞருக்கு காலத்தே பெய்யும் மழையை நினைவுறுத்தியிருக்கவேண்டும். "தெய்வம்"–"மழை"–மனைவி" இம்மூன்றும் உருவக முறையில் இணைந்து தோன்றுகின்றன. வானோரும், வானோருலகும், அவர்தம் அமிழ்தமும் வானின்று வீழும் அமிழ்தமாம் மழையும் ஒருங்கே சேர்ந்து திருவள்ளுவர் மனத்தில் இக்குறளை எழுதுங்கால் தோன்றியிருத்தல் வேண்டும். இக்காரணத்தால்தான் பண்புள்ள மனைவியும் தெய்வத்தோடு இணைந்து "புத்தேளிர் வாழும்" உலகில் சிறப்பிக்கப்படுகிறாள்.

பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (58)

மேலும், உயிர் வாழும்போதும் அவள் தெய்வத் தன்மை பெற்று, தானே இயற்கையாகக் கொட்டும் கருணைவடிவான மழையையும், தன் அருள் மிக்க ஆட்சிக்குள் அடக்கியாளும் தன்மையைப் பெறுகிறாள். கருணைவடிவான மழையும், **இறைமாட்சி கொண்ட கற்புள்ள மனையாளின் அருள்நோக்கி** வாழ்வதாக **மழை–மனைவி** உருவகம் அருமையாக எடுத்தாளப்படுகிறது.

நீர்:— இனி இக்குறளுடன் கற்பியலில் காணப்படும் பின் வரும் குறளையும் உருவக முறையில் ஆராய்ந்து ஒப்பிடலாம்.

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (1323)

கற்புநலம் மிகுந்த தலைவியின் ஊடலின்பத்தை எடுத்துச் சொல்ல எண்ணிய கவிஞர் தேவருலகத்தை எண்ணிப் பார்க்கிறார். வானோர் உணவான அமிழ்தம்போன்ற மழை பூமியில் பெய்யுங்கால், நிலமும் நீரும் பொருந்திக் கலக்குங்கால், அது வானோர் உலகைவிடச் சிறந்து விளங்குகிறது. பிரிக்கவியலாது பொருந்திய நீரும்நிலமும் உடலால் வேறுபட்டும் உள்ளத்தால் ஒன்றிய **காதலனின் அன்பிற்கு** உருவகமாகிறது. இத்துணை அன்புடைய காதலன் கணவராயின், அவன் "வாழ்வாங்கு வாழும்" தெய்வத்தன்மை பெறுகிறான்; அவன் வாழும் உலகமும் மற்றொரு சிறந்த தேவருலகம். அவனைத் தொழும் அடியாளான கற்புள்ளமனைவியும் தெய்வத்தன்மையுடையவள். அவள் பெய்யெனப் பெய்யுமல்லவா மழை? அமரர் உணவான அமிழ்தம் இறைவனது கைம்மாறு வேண்டாத கருணையால் பூமியின்மேல் மழையாகக் கொட்டுகிறது. அதில் மூழ்கிய உலகம் அமரர் உலகைவிடச் சிறந்துவிடுகிறது. அங்கு வாழும் கற்புடைய நல்லாளும் அமரரின் ஆற்றலோடு ஒளிர்கிறாள்.

இதுகாறும் மழையைப் பற்றிக் கூறியவற்றால் நாம் திருவள்ளுவரின் எண்ணப்போக்கை உருவகங்கள் துணைகொண்டு பின்வருமாறு தொகுத்துக்கூறலாம். கருணைக்கும், கைம்மாறு வேண்டா அருளுக்கும் அடையாளமான மழை, அமரர் உலகிலிருந்து மண்மீது கொட்டும் அமிழ்தமாகி, நிலத்தொடு பொருந்தி, அன்பு வெள்ளம் பெருக்கி, அன்பு கொண்ட காதலரை இணைத்து வாழச்செய்து, அவர்கள் வாழும் நிலத்தை வானுலகைவிடச் சிறப்புறச் செய்து, இல் வாழ்க்கையையும் நிலைபெறச் செய்கிறது.

(தொடரும்)

★ குறள்நெறி ★

— மே. சி. சிதம்பரனர்

குறுமை என்ற பண்பின் பெயர் அப்பண்பினை யுடைய பாவிற்குப் பெயராகி, மை விகுதி குன்றி, அள் சாரியை பெற்று. குறு + அள் = குறள் என்றுயது. ஒரு தடியில் துண்டித்ததடி குறுந்தடி. ஒரு அரிசியில் துண்டித்த பகுதி குறுநொய் (குறுணை) என்றாங்கு முதற்பாவான ஒரு வெண்பாவின் நான் கடியிற்றுண்டித்த ஒன்றே முக்காலடி குறள்எனப் பண்பாகு பெயர் பெற்றது. இக்குறட்பாக்களா லாகிய நூலுக்கும் குறள் என்றது கருவியாகு பெயராய் வர்தது. இங்ஙனம் இருமுறை ஆகு பெயர் மடங்கி வரலால் இருமடியாகு பெயரென் றுங் கூறலாம். மேலும் சிறப்புக்குறித்த திரு என்ற அடைசேர்ந்து 'திருக்குறள்' என்பதை அடை யடுத்த ஆகுபெயரெனவும் கூறலாம். நெறி—வழி. எனவே, குறள்நெறி–திருக்குறள் வகுத்த வாழ்க்கை வழி எனவிரியும்.

மயக்கநெறிகள்

பிறப்புண்டு. இறப்புண்டு. இவற்றிற்கிடையே நிகழ்வது வாழ்க்கை. இவ்வாழ்க்கையில் இன்பம் நாடுவது துன்பம் தவிர்ப்பதுஎன்றகொள்கை எல்லாவுயிர்கட்கும் பொதுவான இயற்கை. சிறப்பாக ஆறறிவுபடைத்த மக்கள் தாமிருக்கும் வரை இன்பவாழ்வெய்தித் தாமிறந்த பின்பும் தம்வழியில் எழும்பிறப்புக்களான மக்கள் பேத்துப்பிறர்களும் இன்பவாழ்விலமர வேண்டும், அதற்கின்றியமை யாதது செல்வப் பொருளே எனத்தீர்மானித்து இரவுபகலோவா முயற்சியா லெவ்வகையிலேனும் நிதிதிரட்ட முனைகின்றனர். ஆனல் இவ்வெண்ணத் திற்கு மாருகத் தமக்கே துன்பவாழ்வு சூழ்ந்து விடுவதுண்டு. இது ஏன்? சென்ற வழி தவறு? என்று ஆராயாது ''மாயங்கொல்லோ வல்வினைகொல்லோ-யானுளங்கலங்கியாவதுமறிகிலன்'' எனக்கோவலன் கூறியாங்கு மயக்க நெறியிலுழல்கின்றனர்.

இந்நிலையில் மக்கட்கு நன்னெறி காட்ட அவ்வப்போதெழுந்த தலைவர்களோ பலப் பலர். அவர்கள் காட்டும் நெறிகளும் ஒன்றிரண்டல்ல. உலக நெறி, வைதிக நெறி, சமய நெறி, வேதாந்த நெறி, சித்தாந்த நெறி, பக்தி நெறி, கரும நெறி, யோக நெறி, ஞான நெறி, சன்மார்க்க நெறி எனப் பலப் பல. இவற்றை விளக்கவெழுந்த நூற்களும் மலை மலையாகக் குவிந்தன. இவைகள் வகுத்துக் காட்டுஞ் செயற்கை நெறிகளோ ஒன்றற்கொன்று முரண்பட்ட வகையில் உலக ஒருமைப்பாடான பெரு நெறியோ, வாழ்க்கை நெறியோ கூறி மன்பதைக்கு மயக்கம் தெளிவித்தபாடில்லை. மேலும் சமய நெறித் தலைவர்களோ ஒவ்வொருவரும் தத்தம் நெறிகளே உண்மை நெறிகளென்றும், ஏனைய நெறிகளைப் புறக்கணித்துப் போட்டி நூல்களெழுதியும், சமய விதி நூல்களைத் தத்தம் கடவுள்களே எழுதித் தந்தவையென்றும், அவற்றையெல்லாம் அப்படியே நம்பவேண்டுமேயன்றி ஆராயக்கூடா தென்றும், இன்று கட்சிகட்கு ஆட்கள் சேர்த்தல் போன்றே அன்றும் ஆட்கள் சேர்த்தல் தொடர்ந்ததால் நன்னெறி காட்டவெழுந்த சமயநெறிகள் வெறிகளாய் மாறி வேற்றுமை முளைத்துப் பொருமையரும்பிப்பூசல்கள் பூத்துப்போர்க்களம் காய்த்துப் படுகொலை பழுத்த கதைகள் பலவுண்டு. இன்றும் அந்த அவலங்கள் விட்டபாடில்லை.

பண்டைச் செந்நெறி

இத்தகு மயக்கநெறிகளின் தொடக்கம் கண்ட வள்ளுவர், புரட்சியேதும் செய்தாரிலர். புதுச் சமயம் கண்டாரிலர். சமய வேற்றுமைகளின் ஒற்றுமை கண்டாருமிலர். தம்நெறி பரப்பச் சீடர்கள் சேர்த்தாரிலர். மேற்கூறிய பன்னெறிகளும் தோன்றுமைக்கு முன்பே ''கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றிய'' மூத்த தொன்முது தமிழர்களின் பழமறைப் பண்பாடுகள், தாம் பயின்ற நூல்களில் ஆங்காங்கு மிளிர்வன கண்டார். காலத்தின் கோலத்தால் அவை மறைந்து வருவன கண்டார். உலகமக்கள் மயக்கநெறிகள் தவிர்த்துவாழ்க்கை நெறியின் குறிக்கோளான இன்பநிலையம் சென்றடையுமாறு அப்பண்பாடுகளை ஒன்று திரட்டிக் குறளுருவில் குறள்நெறியாக வகுத்து உலகிற்கருளினரென்க.

''பல நூல்கள் வாயிலாகப் பரவிக் கிடந்த பழமறைப் பண்பாடுகளை ஒன்றுதிரட்டி வழி நூலாகத் திருக்குறளுருவில் வகுத்து மன்பதைக்களித்து அறிவுறுத்தினர்''—**மறைமலையடிகள்.**

''என்ப'', என்பர், என நூல் முழுதுங் காண்பதொடு ''மறைமொழி காட்டிவிடும்''(28) ''நூலோர் தொகுத்தவற்று ளெல்லாம்'' (322) 'உலகத் தெப்டானுலோர்க்கும் துணிபு'' (533) எனவரும் சான்றுகள் அடிகளாரின் கூற்றை அரண் செய்வதாகும்.

திருக்குறளுருவாகிய காலம், ஆராய்ச்சிவல் லுநர்களால் இன்றைக்கு 1900 ஆண்டுகட்குமுன் பிருந்து 2000, 2200, 2300, 2400, ஆண்டுகட்கு முன்வரையில் கொண்டுபோய் வைத்துள்ளனர். இம்முடிவுகளால்கடைச்சங்ககாலத்திற்கும் திருவள்ளுவர்க்கும் பொருத்தம் காட்டிக்கூறும்கதைகளும் உருத்திரசன்மன்முன் அரங்கேற்றிய கதையும், வள்ளுவராற் சங்கமழிந்த தென்பதும் கட்டுக்கதைகளா மென்பது வெளிப்படை.

திருக்குறளில் வரும் சில சொற்களையும், சில கருத்துக்களையும் ஆதாரமாய்க்கொண்டு ஒவ்வொரு சமயநெறியினரும்தத்தம் நெறிக்கிழுத்துப்பேசுவன பலவுண்டு. ஆனல், மேற்கூறிய ஒவ்வொரு நெறியினரும் தத்தம் கொள்கைகட்கும் மறுப்புண்டா ? என்பதை ஆய்வதில்லை. ''சமயக்கணக்கர் மதி வழி கூறு-துலகியல் கூறிப்பொருளிது வென்ற-வள்ளுவன்'' என்ற கல்லாடனர் கூற்றுக்கிணங்க, சமயங் கடந்த, காலம் கடந்த, பண்டைச் செந்நெறியே குறள்நெறி என்பது பொருத்தமாம்.

ஆட்சி மொழிச் சிக்கல்

— வே. சௌந்தரராசன், பி.ஏ., பி.எல்.

இந்தியப் பாராளுமன்றின் அலுவல்களில் புதிய சில நெருக்கடி நிலைகள் தோன்றியுள்ளன. அரசியல் மேகமோ இருள் சூழ்ந்ததாக இன்று மாறி வருகின்றது. புயலடிக்கத் தொடங்கியுள்ளது போன்ற அச்ச உணர்ச்சி ஆங்காங்கே பரவலாகத்தென்படுகின்றது. இதுகாறும் பல்வேறு நல்ல முடிவுகளைக் கண்ட இப்பேரவை இன்று ஏனோ ஆட்சிமொழிச் சிக்கலுக்கு உரியதோர் தீர்வு காண வியலாது நிற்கின்றது. நல்லோர் உள்ளங்களில் அதுபற்றி அமைதி குலைந்துகாணப்படுகின்றது. ஆள வந்தார் இதனை எளிதெனக் கருதி அதிகாரத்தையே நம்பி நிற்கின்றனர். மக்களாட்சி முறைக்கு ஒரு வினாக்குறிஎழுந்துள்ளது என்றே சொல்லவேண்டும். ஆட்சிமொழி பற்றிய ஆர்வலர் சிலர் அரசியல் நலன் கருதி ஆரவாரம் செய்வதாகக் கூறுவது முறையன்று. அவரவர் தம் தாய்மொழி வழியாகவே நாட்டுணர்வு பெறுதலும், அதனையுறு துணையாகக் கொண்டு கலை, பண்பாடு, வரலாற்றுப் பெருமைகள், இலக்கியம், கணிதம், ஆய பலவற்றையும் வளர்ப்பதும் உலகியல் மரபு. ஐரோப்பிய நாடுகளான செர்மனி, உருசியா, பிரான்சுபோன்ற நாடுகளின் வளர்முறைகள் நமக்கு இவ்வுண்மையைத் தெள்ளிதின் புலப்படுத்துகின்றன. அதேபோன்று இன்று இந்தியாவிலும் தாய்மொழிவழியாக நாட்டுணர்வும், நாட்டு நிருவாகமும் மேற்கொள்ள குடிமக்கள் பெரிதும் விழைந்து நிற்கின்றனர். இவ்விழைவு ஒரு மொழி பேசுவோரிடை புகுத்தப்படுவதன்று, இயல்பின் உருவாவதுகருவிலிருந்து. இதனைஎஞ்ஞான்றும் தவிர்க்கவும், தடுக்கவும் வல்ல வேற்றுணர்வொன்று இல்லை. குருதியிற் பிணைந்து உறுதியாய் நிற்பது ஆகலின் மொழியுணர்வு முதலுணர்வாகவும் முடிவுணர்வாகவும் ஒவ்வொரு குடிமகனிடத்தும் ஆட்கொண்டு விடுகின்றது. அதில் தமிழ் மொழி போன்று தன்பாலில்லாதது இல்லை எனக் கூறுமளவு சொல்வளம், கற்பனை, இலக்கணம் அத்துணையும் நன்கு வளர்ந்து செந்தண்மை பெற்றுள்ள மொழிபேசுவோர் நிலை சற்றுமிகுதியான பெருமையோடு விளங்குவதில் வியப்பதற்கேதுமில்லை. நிலத்தால் மாநிலமொழி என்றால் ஒப்பியல் நிலையாலும் அதுவேதான் எனத் தமிழைக் கூற முடியாது. மாநிலங்களைக் கடந்து உலகின் பல நாடுகளிலும் சென்று சிறப்புப் பெற்றுள்ள சிறந்த மொழி தமிழ். தமிழ் நன்கறிந்தோர் இதனை உலக மொழி உலகியல் மொழிஎன்றேஒப்புவர். இத்தகு சீர்த்த நன் மொழிக்கு இன்று இடர்ப்பாடுகள் பலஎழுந்துள்ளன. அவற்றை ஆய்ந்து நமது மொழி வழியாக அரசியலுரிமை, தொழில் வளர்ச்சி, துணைக்கண்டத்தின் எதிர்கால ஒற்றுமை, கூட்டாட்சியின் தன்மைகள், மக்களாட்சி மாண்பும் ஆயவற்றை நாம் பெறவேண்டும். தனித்தன்மைகளுக்கு மாசு ஏற்படின் தனிமனிதனுக்கும் மாசு ஏற்படும் என்பதை மொழிச்சிக்கலில் முன் வைத்து ஆய வேண்டும்.

துணைக்கண்டத்தில் நிலப் பரப்பளவு ஒருமைப்பாடு ஏற்படுத்தக்கருதி அரசியல்சட்டத்தில் இந்திக்கு ஏற்றம் தர 1948ல் அரசியல் நிர்ணய சபையினர் ஒப்பினர். பெரும்பான்மையோரால் பேசப்படுவதாக ஒரு குறிப்பினை ஏற்படுத்திக்கொண்டு அத்தகு ஒருசார்புள்ள முடிவினைச்செய்தனர். அச்சபையின் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களது தனிக் கூட்டத்தில் இந்தியாவின் எதிர்காலப் பொதுமொழி. என்றவாதம்வாக்கெடுப்பிற்குவிடப்பட்டதில்அச்சபைசரியாய் இருகூறாய்ப் பிளந்து ஒரு சாரார் இந்திதான் வேண்டும் என்றும் பிறிதொரு சாரார் இந்தி அறவேகூடாது என்றும் கூற இறுதியில் அவைத்தலைவர் தமக்கென்றுள்ள தனிச்சிறப்பு வாக்கினை இந்திக்கு ஆதரவாக அளித்து இந்தியே இந்தியாவின் எதிர்காலப்பொது மொழி என முடிவுகட்டினர். காங்கிரசாருள்ளேயே பெரும்பான்மை பெற முடியாது நன்கொடைபோன்றதோர் வாக்கினால் திடுமென உருவான, அதாவது இன்றைக்குப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் ஏற்பட்ட. முடிவினையே நாம்தவறுஎன்கிறோம். ஏன்? அந்தச்சபை இந்தியக்குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதன்று; நியமிக்கப்பட்ட மன்றமேயாம். அன்று மக்கள்குரல் அங்கு ஒலிக்கவழியில்லை கட்சிக்குரல்தான் அது என்பதில் ஐயமில்லை. பின்னர் வந்த பாராளுமன்றம் இப் பொதுமொழிச் சிக்கல் குறித்துத் தனிக் குழு ஏதும் ஏற்படுத்தி ஆய்ந்தால் இந்திக்கு உயர்தனி இடம் இல்லாமற்போகலாம்எனவஞ்சி தமக்குமுன்கூறப்பட்ட பழைய கருத்தினையே ஏற்பதாக உடன்பட்டனர். உடன்பாடு எதற்கென்றால் கட்சியைச் சரிக்கட்ட, சிக்கலை அல்ல. தொலைநோக்கற்ற அரசியல் புரிந்ததன் விளைவாக இன்று ஆட்சிமொழிச் சிக்கல் ஒரு பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துவிட்டது.

அரசியல் சட்டத்தில் இந்தி, இந்துத்தானி, குசராத்தி, மராட்டியம், வங்காளி, உருது, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், பஞ்சாபி போன்ற பதினான்கு மொழிகள் ஒன்றிற்கொன்று சமவாய்ப்பிற்கும் சம தகுதிக்கும் உரியவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன்படி இந்தி அனைத்திந்திய மொழி என்றால் உருதுவும் அனைத்திந்திய மொழிதான், தமிழும் அனைத்திந்திய மொழிதான் என்றுபொருள். இவற்றுள் ஒருமொழி பிறிதொன்றனுக்கு உயர்ந்ததன்று என்ற உறுதிப்பாடும் இருக்கிறது. இது மாநிலமொழி, அது அனைத்திந்தியத் தகுதியுள்ள மொழி என்று பிரித்துரைக்கப்படவுமில்லை. உண்மை இவ்வாறிருக்க, இன்று இந்திக்கு மட்டும் தனித்தகுதியும் தனிச்சிறப்பும் அளிப்பது தவறினும்தவறு, வாக்குறுதியைப்புறக்கணிக்கின்ற போக்காகும். பதின்மூன்று மொழிகளுக்கும் மேலான ஒரு தலைமையை உருவாக்கித் திட்டமிட்டுத் திணிப்பது அறமாகாது, அரசியலுமாகாது.

ஈதென்ன வேடிக்கை! பதினான்கு மொழிகளிலும் ஒரு சேர நிருவாகம் நடத்தவியலுமா என்ன என்கிறார்கள். பதினான்கு எங்கேயிருந்து வரும். சட்டத்தில் மக்கள் மனமுவந்து அளித்த உரிமையினை உயர் நல் வாய்ப்பினைத் தங்களுக்கு வேண்டாம் என்றும் இரண்டாந்தர நிலையே போதும் இந்திக்கே எங்கள் ஆதரவு, எங்களது மொழிக்கு மாநில அளவில் மட்டும் உயர்வுகிட்டின் போதும் அனைத்திந்திய ஆட்சிமொழியாவதற்கென அரசியல் சட்டமளித்துள்ள உயர்தகுதி, வாய்ப்பு ஏதும் வேண்டா எனத் துறவுக் கோலம் பூண்டு, வலிந்து உரிமையினை இழக்கிறோம்,……

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

(15-2-64 இதழின் தொடர்ச்சி)

'பூங்கோதை'

— வித்துவான் மு. இராமகிருட்டினன், எம்.ஏ., பி.டி.

காளையப்பனுக்குத் தன் தாயினிடத்திலோ, தங்கைமாரிடத்திலோ மிகுதியான பற்று இருந்ததென்று கூற முடியாது; ஆனால் பூங்கோதையினிடத்து அவனுக்கு அருவருப்பு மிகுதி என்பது மட்டும் உறுதி. தொடர்ந்து அவளுக்குத் துன்பங் கொடுத்துக்கொண்டே இருப்பான். அவனுடைய குரலைக் கேட்ட அளவிலேயே பூங்கோதையின் நாடி நரம்புகளெல்லாம் ஒடுங்கிவிடும். அவனுடையகொடுமைகளை யாரிடத்திலே சென்று முறையிடுவது? அவன் பூங்கோதையை அடித்தாலும் மிதித்தாலும், உதைத்தாலும் அவனுடைய தாயாருக்குச் கண் தெரியாது; அவன் அவளை எவ்வளவு இழிவாகத் திட்டினாலும் அவளுக்குக் காது கேளாது இல்லத்துப்பணியாளா யாரும் இளவலுக்கு எதிராக, நீதி கூற முடியுமா?

வழக்கம் போல் மிகவும் கீழ்ப்படிதலோடுபூங்கோதைகாளையப்பன் முன் சென்று நடுங்கிக் கொண்டே நின்றாள். அவன் தன் நாக்கைத் துறுத்திக்கொண்டு தன் கண்களை உருட்டிமருட்டி விழித்தான். அடுத்து என்ன நடக்கும் என்பது பூங்கோதைக்குத தெரியும். அதற்கிடையில் அவனுடைய தோற்றம எத்துணைக் கொடியதாகவும, அருவருக்கத்தக்கதாகவும் உள்ளது என்று சற்று எண்ணிப் பார்த்தாள். அதனைக் குறிப்பாக உணர்ந்துகொண்டவன் போல் காளையப்பன் ஒன்றும் பேசாமல் ஓங்கி முதுகிலே ஒரு அறை அறைந்தான். பூங்கோதை 'அம்மா' என்று அலறியிருப்பாள்; ஆனால் அவளுடைய அச்சம் அதனையும் தடுத்துவிட்டது தள்ளாடிக் கொண்டே இரண்டு எட்டு பின்னே நகர்ந்து நின்றாள்.

'அம்மாவை எதிர்த்துப் பேசினதற்கு இதுதான் பரிசு. முளைக்கிற முளையிலேயே உனக்கு எவ்வளவு கள்ளத்தனம். அம்மாவை வைது விட்டு ஒருவரும் அறியாமல் வந்து ஒளிந்து கொண்டாயே; கண்ணைப் பார். தோகைமலைக் குறத்திகூடத் தோற்றுவிடுவாள்'என நீதிபேசினான் காளையப்பன்.

அவனுடைய கொடுங்கோன்மையில் பயிற்சி பெற்றிருந்த பூங்கோதைக்குத் தான் விடை பகர்வதால் பயனில்லை என்பது தெரியும். ஆகவே ஏச்சு மொழியை அடுத்துவரும் அடியினின்றும் எப்படித் தப்புவது என்பதையே ஆய்ந்து கொண்டிருந்தாள்.

'திரைக்குப் பின்னால் என்ன செய்து கொண்டிருந்தாய்?'

'நான் படித்துக் கொண்டு இருந்தேன்.'

'அந்தச் சுவடியைக் காட்டு'.

பூங்கோதை அறைக்குள் சென்று அந்த சுவடியைக் கொண்டுவந்து அவனிடம் கொடுத்தாள்.

'நீஎப்படி எங்களுடைய சுவடிகளை எடுக்கலாம்?'

'என்னுடைய அப்பா எழுதியது தானே?'

'உன் அப்பன் எழுதினான்; வெறும் பயல். அதை அச்சுப்போட என்னுடைய அப்பா தான் பணங்கொடுத்திருப்பார். உன் அப்பன் என்ன பெருஞ் செல்வனா? உனக்கு என்ன தேடி வைத்துவிட்டுப் போனான்? நீ தெருவிலே போய்ப் பொறுக்கித் தின்ன வேண்டியவள் அம்மாள் ஏதோ இரக்கமுள்ளவர்கள்; அதனால் தான் தம் செலவில் தம்முடைய செல்வக் குழந்தைகளுக்குக் கொடுப்பது போலவே சோறும் துணியும் கொடுத்து வருகிறார்கள். இந்த அழகில் நீ அம்மாவைப் பழிக்கிறாய். சரி, நீ என் சுவடிப் பேழையில் கை வைத்ததற்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன் போ அப்படி வாயிற்படியில் நில்' என்று சீறினான்.

பூங்கோதைக்குக் காளையப்பன் தன்னை அடித்ததைப் பற்றியோ, பழித்ததைப் பற்றியோ இருந்த வருத்தம், தன் தந்தையையும் அவன் பழித்ததைக் கேட்டவுடன் எழுந்த உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. காளையப்பன் தன்னை என்ன செய்யத் துணிந்தான் என்பதை அறியாமல் விம்மிக் கொண்டே கதவருகில் சென்றாள். அதற்கிடையில் அவன் தன் கையிலிருந்த கனத்த அட்டைச் சுவடியை சுழற்றி அவள் மீது எறிவதைக் கண்டாள். பூங்கோதை அஞ்சி அலறி ஒதுங்கினாள். அதற்குள் அச்சுவடி கன்னத்தைச் சேர்த்து அறைவது போல் விழுந்தது. அடி தாங்கமுடியாமல் அவள் கதவில்போய் விழுந்தாள். கதவுமுனை அவளுடைய நெற்றியை பிளந்துவிட்டது. குருதி கொப்பளித்துக் கொட்டியது. அவளால் அதன் வலியைத் தாங்கமுடியவில்லை. குருதி கசிந்து அவளுடைய கண்களிலும், வாயிலும் படிந்தது. குருதியைக் கண்டவுடன் பூங்கோதை அச்சம் சினத் தீயாக எழுந்தது. அவள் பாண்டியன் முன் தோன்றிய கண்ணகியெனக் குமுறினாள்.

"நீ ஒரு கொடுங்கோலன், கொலையாளி, நெஞ்சிலே ஈரமில்லாதவன்"

"என்ன! நீ என்னையா இப்படி ஏசுகிறாய்? கேட்டீர்களா பூஞ்சோலை, வண்ணக்கிளி? அம்மாவிடம் சொல்லிக் கொள்ளுகிறேன் இல்லை, இல்லை. அதற்குமுன் உன்னை நானே—

அவன் வெறிபிடித்தவன் போல அச்சிறுமியின்மேல் பாய்ந்து அவள் முடியையும், தோள்பட்டையையு பிடித்துக் குலுக்கினான். நெற்றிய லிருந்து மேலும் குருதிகொப்பளித்த பூங்கோதையின் கழுத்திலும் மா பிலும் வடிந்தது. அவன் தன்னை கொலை செய்யப் போவதாகவே பூங்கோதை நினைத்தாள்: உடனே அவளுடைய நிலை நாயையும் எதிர் கின்ற வெருகின் நிலையாக மாறியது. தன்னை விடுவித்துக்கொள்ளும் பொருட்டு அவள் என்ன செய் தாளென்றே அவளுக்குத் தெரியாது. 'அம்மா அம்மா!! என் முகம். கண்ணெல்லாம் தொலைந்தன. காட்டுப் பூனை போல பிறண்டுகிறாள், என்று கூறிக்கொண்டே காளையப்பன் பூங்கோதையை உதறித்தள்ளினான். அவள் நிலை தடுமாறி நின்றாள். இதற்குள் இருவரும் உள்ளே ஓடிச் சென்று பூங்கோதை தம் அருமை அண்ணனைத் தாக்குவதாக அம்மையாரிடம் ஓலமிட்டனர். அம்மையார் அலறியடித்துக்கொண்டு தாழ்வாரத்திற்கு வந்து,

'என்ன கொழுப்பு இந்த யாருமற்ற கழுதைக்கு!' என்றாள்.

'இருந்தாலும் இக்குட்டிக்கு இவ்வளவு வெறி ஆகாது' எனப்பின் பாட்டு பாடினாள் காளியம்மை.

'அவளை இழுத்துச் சென்று மேல் மாடியில் உள்ள சிவப்பு அறையின் உள்ளே தள்ளி கதவை இழுத்துப் பூட்டி விடுங்கள்' என்று செங்கமலம் ஆணையிட்டாள்.

உடனே இரண்டுபேர் தன் கால்களையும் கைகளையும் பிடித்து மாடிப்படியில் தூக்கிக்கொண்டு போவதை பூங்கோதை உணர்ந்தாள்.

இயல் - 3

பூங்கோதை திமிறிக்கொண்டே போனாள் அத்தகைய வெறிச் செயல்களெல்லாம் தன்னிடத்தில் புதுமையாகவே தோன்றியுள்ளன என்பதை அவள் உணர்ந்தாள். அவளைத் தூக்கிச்சென்ற கண்ணம்மா ஆகியவர் உள்ளத்தில் இதுவரை ஒரு சிறிது ஒதுங்கிக்கிடந்த நல்ல எண்ணமும் போய்விடும்போல் இருந்தது. இதற்குக் காரணம் அன்று பூங்கோதை தன்னியல்பாக நடந்துகொள்ளவில்லை என்பதுதான்.

பல ஆண்டுகளாக அடங்கிக்கிடந்த அடிமை ஒரு விநாடிநேரம் பொறுமை இழந்ததால் ஏற்படக்கூடிய இன்னல்களை அவள் அடையவேண்டியதாயிற்று. அந்நிலையில் அவள் எதனையும் பொருட்படுத்துவதாக இல்லை. 'துணிந்தவனுக்குத் துயரமில்லை' என்ற நிலைக்கு வந்துவிட்டாள்.

(தொடரும்)

குறள்நெறி இயக்கக் குழு

'குறள் நெறி இயக்கம்'
சி. 17, திருநகர், மதுரை-6

இன்று மக்களிடையே குறள் நெறியைப் பரப்பி நல்லொழுக்கம் உடையவர்களாய்க் கடமைப்பற்றும் உரிமையுணர்வும் கொண்டு நாட்டுக்குத் தொண்டு செய்யும் நன் மக்களை உருவாக்குதல் வேண்டும். மக்கள் குறள் நெறியில் வாழத் தலைப்பட்டால்தான் மக்களாட்சி குற்றமற்ற ஆட்சியாக விளங்க இயலும். ஆகவே குறள் நெறியை மக்களிடையே பரப்தற்கு ஆங்காங்குக் **குறள் நெறி இயக்கக்குழுக்கள்** தோன்றல் வேண்டும்.

குறள் நெறி இயக்கக்குழு எவ்வாறு அமைக்கவேண்டுமென்று அன்பர்கள் பலர் கேட்டுள்ளனர்.

"குறள் நெறியில் வாழ்வோம்" என்று உறுதி பூண்டுள்ளவர்கள் குழுவாக அமைந்து, தலைவர் ஒருவர், துணைத் தலைவர் இருவர். செயலாளர் இருவர், பொருளாளர் ஒருவர், செயற்குழு உறுப்பினர் ஐவர் ஆகத் தமக்குள் தேர்ந்து குழுவை உருவாக்கிக்கொண்டு திருக்குறளை மக்களிடையே பரப்பும் தொண்டில் ஈடுபட வேண்டுகின்றோம்.

முதலில் வாரம் ஒருநாளேனும் திருக்குறள் வகுப்பும் திங்கள் ஒருமுறையேனும் திருக்குறள் விளக்கச் சொற்பொழிவும் நடத்துதல் வேண்டும், திருக்குறள் வகுப்பு நடத்துதற்கு ஆங்காங்குள்ள தமிழ்ப் புலவர்களின் தொண்டைப் பயன்படுத்துமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

குழு அமைத்த பிறகு அதன் விவரங்களைக் 'குறள் நெறி' இதழ்க்கும் ஏனைய செய்தி இதழ்க்கும் அறிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

'குறள் நெறியில் வாழ்வோம்' என்று உறுதி பூண்டுள்ளவர்கள் பெயர்கள் வருமாறு:—

1) புலவர் வி. பொ. பழனிவேலன்,
"தமிழகம்",
திருத்துறைப்பூண்டி.

2) திரு. நா. கண்ணன்,
மருத்துவ நிலையம்,
புத்தகரம், ஏனங்குடி, தஞ்சாவூர் மாவட்டம்.

3) திரு. கி. சீதாராம குப்தா,
திருப்பூர் சாலை, உடுமலைப்பேட்டை.

4) புலவர் இமயவரம்பன்,
ஈசுவரன் கோவில் தெரு, மணப்பாறை.

5) திரு சேது, அண்ணாமலை, மெயின் ரோடு,
கோவில்பட்டி.

6) திரு ப. கண்ணன், உரிமை: செந்தமிழ் அச்சகம்,
சலகண்டபுரம், சேலம் மாவட்டம்

7) திரு குறளோவியன். செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம், பாண்டிக்குடி.

8) திரு நா. கருப்பையன், ஆசிரியர், ப. கூ. ம. து. பள்ளி, பாண்டிக்குடி.

9) திரு மு. கருப்பையா, ஊராட்சி மன்ற உறுப்பினர்
பாண்டிக்குடி.

10) திரு வி. உதயகுமார், செயலாளர், தி. மு. க.,
பாண்டிக்குடி.

11) திரு குழ. செங்குட்டுவன், 'குறள்நெறி' முகவர்,
பாண்டிக்குடி.

12) திரு வி. இராமசாமி, 15, கடற்கரை வீதி,
தூத்துக்குடி-1

13) திரு ச. சுப்பிரமணியன், தலைமையாசிரியர், இந்து அரசு தவிப் தொடக்கப்பள்ளி, வா. இராமலிங்கபுரம். த. சேடபட்டி, விருதுநகர் (வழி)

14) மு. பாரி, மானுப்பட்டி, உடுமலைப்பேட்டை.

15) திரு சா. வி. இராசேந்திரராசு, ஆசிரியர்,
மாங்குளம், மதுரை மாவட்டம் (தொடரும்)

மாணவர் விரும்பும்
தென்னகத்தின் ஒப்பற்ற பயிற்சிக் கல்லூரி
மதுரை தனிப்பயிற்சிக் கல்லூரி
Madurai Tutorial College
XI Std., P. U. C., Matric, B. A., B. Sc., B. Com.
முதலிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
மகளிர்க்குத் தனிவகுப்பு. விடுதி வசதி உண்டு
தகவல்: M. T. C.
G. K. S. Rest House
(Near College House)
Town Hall Road MADURAI-1
கு. இளஞ்சேரன், M. A.,
முதல்வர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனர், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர் கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.